விலை ரூ. 30/=

# ஈழநாடு

வார இதழ்

Reg.: PV00216844

Eelanadu — ඊළනාඩු

30.11.2019 சனிக்கிழமை

EUT (PVT) LTD

புதிய வடிவிலான பான்ரி கபேட்டுகள் துரிதமாக வடிவமைத்துத் தரப்படும்.



Head Office :
Chunnakam East, Chunnakam Jaffna.
021 224 0110, 077 656 6873

Factory :
Palalay Road,
Punalaikadduvan South.

Show Room :
# 150, K.K.S. Road, Chunnakam, Jaffna.
021 454 6330

## தியாக வரலாறுகள் மீது அரசியல் செய்யாதீர்கள்!

இன்று சிலர் மாவீரர் நாளன்று காலை முதல் மாலை வரை குடாநாட்டின் பல இடங்களுக்கும் ஓடி ஓடி சுடர் ஏற்றுவதும் அஞ்சலி செய்வதுமாக புதியதொரு முறையை உருவாக்க எத்தனிக்கிறார்கள். இவ்வாறு நடத்தப்படும் அஞ்சலி நிகழ்வுகளில் ஆகக் கூடுதலாக நான்கு அல்லது ஐந்து பேர்களே பங்கேற்கிறார்கள். இவ்வாறு ஓடி ஓடி நடத்தும் அஞ்சலி நிகழ்வுகளை படம் பிடித்து வெளியிட்டு அதை தமது அரசியலுக்கான ஆதாயமாக்க முற்படுகிறார்கள். பக். 04





## உலகப் பேரழிவு எப்படி இருக்கும்?

கிராமமே சிதறி ஓடிக்கொண்டிருந்தது. 1,600 மைல்களுக்கும் அப்பால் வரை கேட்ட பெருவெடிப்பின் சத்தத்தைவிட அங்கிருந்த மரண ஓலங்களின் ஓசை அனைவரின் காதுகளையும் அச்சத்தால் அடைத்துக் கொண்டிருந்தது. பலர், எரிந்து கொண்டிருந்த உடலோடு சூடு தாங்காமல் துடித்தபடி ஓடிக்கொண்டிருந்தனர். பக். 06



## மாவீரர் நாளும் பாடலும்

உமையாள்புரத்தில் இராணுவத்தினர் ஓடும்போது சிரித்தபடியே “துரத்துங்கடா” என்றபடியே அவர்களின் ட்றக்கில் ஏறிய செல்லக்கிளியம்மான்... களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலில், “அம்மாட்டச் சொல்லுங்கோ நான் சண்டையிலதான் செத்தனெண்டு”, என்று சொன்ன பரமதேவா.

பக். 08, 09

## பிளவுபடும் கூட்டணிகள் : ஆபத்தில் தமிழர் நலன்கள்!

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவே தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற்று வாழவோ, குறைந்தபட்சம் மாகாண சுயாட்சியை வலியுறுத்தவோ பலமான சக்தியாக இருக்கும். இந்நிலையில், ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

பக். 05







## கெத்துக் காட்டும் கெலாடா குரங்குகள்

தலைவன் பதவிக்கு எவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம் என்பது தலைவனுக்கு நன்கு தெரியும். தலைவனாக இருக்கும் குரங்கும் ஒரு காலத்தில் தனியனாக இருந்ததுதான். இதனால், தனியன்கள் தலைவனுக்கு எதிராக என்ன செய்வார்கள் என்பதைத் தலைவனாக இருக்கும் குரங்கு தெரிந்து வைத்திருக்கும். பக். 15

## யாழ்ப்பாணத்து பத்திரிகைத்துறை முன்னோடி



“பத்திரிகையாளன் பெரும்பாலும் எல்லாத் தரப்பினரோடும் எப்பொழுதும் நண்பர்களாய் இருக்க முடிவதில்லை. ஒரு நல்ல செயலுக்காக ஒருவரை ஒரு முறை பாராட்டி எழுதுபவர், மற்றொரு முறை வேறொரு காரணத்துக்காக அவரை விமர்சிக்கவும் வேண்டியேற்பட்டு விடுகின்றது. நடுநிலை பத்திரிகை, பத்திரிகையாளன் நிலை இதுதான்.

பக்.20

## தமிழர் தாயகத்தின் மாவீரர் நாள் பதிவுகள்



பக். 12, 13

Vanikaa Medicals

HEALTHY CHOICE MEDICALS

Healthy Choice Medicals



அனைத்துவித மருந்துப் பொருள்கள்
பால்மா வகைகள் மற்றும்
மருத்துவ உபகரணங்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்



462 D, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உலக நடப்பு

# ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்வதா வெளியேறுவதா?




## முடிவு செய்யப்போகும் பொதுத்தேர்தல் பிரிட்டன் தமிழர்களின் ஆதரவு யாருக்கு?

இராஜராஜன்

எதிர்வரும் 12 ஆம் திகதி பிரித்தானியாவில் பொதுத்தேர்தல் நடக்கவுள்ளது. கடந்த பொதுத் தேர்தல் நடந்து இரண்டரை ஆண்டுகள் முடிவதற்குள் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலை மக்கள் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது தொடர்பாக பல்வேறு பேச்சுக்கள் நடைபெற்றன. இதன் பயனாக இரண்டு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பேரம் எட்டப்பட்டது. இந்தப் பேரமானது பிரித்தானிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களால் ஏற்றுக்கொள் ளப்பட்டால் மட்டுமே இதற்கு சட்ட அங்கீகாரம் கிடைக்கும். அவ்வாறு அங்கீகாரத்தைப் பெற்றிருந் தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதுபோல் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து 2019 ஒக்ரோபர் 31 ஆம் திகதி அது வெளியேறி இருக்கும்.

ஆனால், நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலகல் மசோதாவை (சட்ட முன் வரைவை) துருவி ஆராய்வதற்கு போதுமான விவாத காலம் தரப்படவில்லை என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தனர். தனது ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால்தான் பொதுத்தேர்தலுக்கு போவதைத் தவிர வேறுவழிஇல்லை என்று எச்சரித்து வந்த பிரதமர் பொறிஸ் ஜோண்சன் நாடாளுமன்றத்தில் அவருடைய மசோதாவுக்கு முட்டுக்கட்டை போடப்படவே பொதுத்தேர்தல் டிசம்பர் 12 ஆம் திகதி என்று அறிவிப்பு செய்தார். இதனைத் தொடர்ந்து நவம்பர் 6 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தேர்தல் பிரசாரங்களும் தொலைக்காட்சி விவாதங்களும் ஆரம்பித்தன.

தேர்தலில் இரு பெரும் கட்சிகளான கன்சவேட்டிவ், (Conservative) லேபர் (Labour) ஆகியவை எதிரும் புதிருமாக நின்று போட்டியிடுகின்றன. பிரதமர் பொறிஸ் ஜோண்சனின் (Boris Johnson) கன்சவேட்டிவ் கட்சி தாம் வெற்றிபெற்றால், ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அங்கீகாரம் பெற்று இந்த ஆண்டு அல்லது ஜனவரி மாத முடிவுக்குள் வெளியேறிவிடுவதாக அடித்துக்கூறி வருகிறார்.

எதிர்க்கட்சியின் தலைவரான ஜெரமி கோர்பனின் (Jeremy Corbyn) லேபர் கட்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுதல் தொடர்பாக ஒரு திட்டவட்டமான நிலை இல்லாததனால் தாம் வெற்றிபெற்றால் 2016 நடந்த பொதுஜன வாக்கெடுப்பைப்போல் மீண்டும் ஒன்றை நடத்தி மக்களின் விருப்பத்தை அறிந்து அதன்படி செயற்படுவார் என அறிவித்துள்ளார். மீண்டும் ஒரு பொதுஜன வாக்கெடுப்பா? என்று மக்கள் சலித்துக்கொள்கிறார்கள். இதனால் இந்த நிலைப்பாட்டிற்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகம் இல்லை. ஏனென்றால், ஜுன் 2016 இல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதா அல்லது தொடர்ந்து இருப்பதா என்று முதன்முதலாக ஒரு பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் மக்கள் வெளியேற வேண்டும் என்று வாக்களித்திருந்தனர். இதன் பிரகாரம் தேர்தலில் முடிவை நிறைவேற்றவேண்டியது அரசின் ஜனநாயகக் கடமை. ஆதலால் பிரித்தானியா தனது வெளியேறும் விருப்பத்தை முறையாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தெரிவித்தது. இரு தரப்பினரும் வெளியேறுவதற்கான கொள்கைகளை வகுப்பதற்கு முறையான பேச்சுக்களை ஆரம்பித்தனர். பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவு இரண்டு தடவைகள் பிரித்தானிய நாடாளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்டபடியால் பொது தேர்தலை வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மிகச்சிறிய பெரும்பான்மையுடனும் வேறொரு சிறு கட்சியின் ஆதரவுடனும் ஆட்சி அமைத்து வந்த பொறிஸ் ஜோண்சனின் கன்சவேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையேயும் கிட்டத்தட்ட அரைப்பங்கினர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கும் மிகுதியானோர் தொடர்ந்து இருப்பதற்கும் ஆதரவு தெரிவித்திருந்தனர். இதேபோன்ற நிலையே எதிர்க்கட்சியான லேபர் கட்சியிலும் இருந்துவந்தது. இந்த இழுபறியினாலேயே விலகல் மசோதா நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படவில்லை.

கடந்த 45 ஆண்டுகளாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒற்றைச் சந்தை பொருளாதாரத்தில் பின்னிப்பிணைந்து இருக்கிறது பிரித்தானியா. இதிலிருந்து வெளியேறும் பட்சத்தில் என்றும் இல்லாதவாறு பொருட்கள் விலை ஏற்றம் மற்றும் பாரதூரமான பொருளாதார பின்னடைவைச் சந்திக்கநேரிடும் என்று பிரித்தானிய நிதி நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள், மற்றும் வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு போன்றவை எச்சரித்துள்ளன. எனினும் பிரித்தானியா வெளியேறுவதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியே வரலாம். ஆண்டுதோறும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு செலுத்தும் மொத்த பங்களிப்பு தொகையான கிட்டத்தட்ட 20 பில்லியன் பவுண்ஸை மீதப்படுத்தலாம், கட்டுப்பாடற்ற முறையில் பெருகிவரும் கிழக்கு ஐரோப்பிய குடிவர வாளர்களின் தொகையைக் குறைக்கலாம். இதனால், பாடசாலை, மருத்துவமனை போன்றவற்றில் நெரிசல் களும் குறையும், குடிவரவாளர்களின் தொகை வீழ்ச்சி அடைந்து உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாகும் எனப் பல காரணங்களை பிறக்சிற்றியர்ஸ் (Brexiteers) எனும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற விரும்புவோர் கூறுகின்றனர்.

வெளியேறக்கூடாது என்று வாக்களித்தவர்களும் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு இடையில் வரிக்கட்டுப்பாடு இல்லை. நாட்டு எல்லைகளில் தங்கு தடையின்றி வர்த்தகங்கள் சுமுகமாக நடந்து வருகின்றன. ஆனால் ஒன்றியத்தை விட்டு வெளியேறினால் எல்லைகளில் வரி அறவிடும் முறை அமுலுக்கு வரும், ஒவ்வொரு எல்லைத் துறைகளிலும் பாரவூர்திகளையும் சோதனை செய்து அனுப்புவது சிக்கலும் சிரமமுமான காரியம். வர்த்தக நிறுவனங்களுக்கு நட்டம் ஏற்பட்டும், பொருள்கள் விலை அதிகரித்து பணவிக்கம் மற்றும் பொருளாதார சீரழிவு ஏற்படும் மேலும் பவுண்ஸின் நாணயப்பெறுமதி வீழ்ச்சியுற்று இறக்குமதி செலவு அதிகரித்து பொருட்களின் விலையும் அதிகரிக்கும்.

மேலும், அதிக அளவுவில் கிழக்கு ஐரோப்பியர்கள் இயக்கிவரும் முக்கிய ஸ்தாபனங்களான மருத்துவமனைகள், விடுதிகள் உணவு நிறுவனங்கள், விவசாய பண்ணைகள் போன்றவை இவர்கள் திரும்பிபோகும் பட்சத்தில் ஆட்பற்றாக்குறையினால் திக்குமுக்காடுவதுடன் நாட்டின் பொருளாதாரத்திலும் பாரதூரமான பின்னடைவை ஏற்படுத்தும் என்றும் கூறிவருகிறார்கள். அடிப்படையில் லேபர் கட்சி, கன்சவேட்டிவ் கட்சியைப் பார்க்கிலும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் கூடியஅளவு நெருங்கிய உறவை பேணுவதற்கே விரும்புகிறது.

மீண்டும் ஒரு பொதுஜன வாக்கெடுப்பு வைப்பது என்று லேபர் கட்சி கூறுவது. றிமெய்னர்ஸ் (சுநஅயைநெசள) எனும் வெளியேற விரும்பாதவர்களுக்கு மூச்சுவிடுவதற்கு இடம் கொடுத்ததுபோல் இருந்தாலும், உழைக்கும் வர்க்கத்தினரின் வாக்குகளையே பெரிதும் நம்பியிருக்கும் லேபர் கட்சியின் மீண்டும் ஒரு பொதுஜனவாக்கெடுப்பு என்ற யோசனை அதன் வாக்காளருக்கு ருசிக்கக்கூடியதாக இல்லை.

இலங்கையில் இருந்து போர்சூழல் காரணமாக வெளியேறிய பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஐரோப்பா எங்கிலும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தின் ஓர் அங்கமாக இருக்கும் காரணத்தால் தமிழ் மக்கள் எவ்வித விசா கட்டுப்பாடுகளும் இன்றி தங்கள் குடும்பத்தினர், உறவினர் நண்பர்களை மகிழ்ச்சியாக வந்து சந்தித்து செல்கிறார்கள். பலர் ஐரோப்பிய குடியுரிமை பெற்ற பின்பும் பிரித்தானியாவுக்கு குடும்பத்தோடு வந்து குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து முற்றாக வெளியேறி விசா கட்டுப்பாடுகள் வருமேயானால் அது தமிழ் மக்களின் இலகுவான நகருதலை இது கட்டுப்படுத்தி தேவையற்ற சிரமங்களையே உருவாக்கும்.

தமிழ் மக்கள் பொதுவாக லேபர் தொழிற்கட்சிக்கு ஆரம்பகாலத்தில் இருந்து வாக்களிக்கிறவர்கள். ஆனாலும் அண்மைக்காலங்களாக கணிசமான வர்கள் கன்சவேட்டிவ் கட்சியுடனும் இணைந்து ஆதரவளித்து வருகின்றனர். (18ஆம் பக்கம் பார்க்க)

வார இதழ்
ஈழநாடு
Eelanadu
30.10.2019 சனிக்கிழமை

ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்!
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்!
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## ஒற்றுமையே தமிழருக்குப் பலம்!

**தமிழினம் முக்கியமான வரலாற்றுத் திருப்பத்தில் நிற்கின்றது. இதனை சாதகமாக்கி – தமிழ் இனத்தின் நலன்களைக் கருத்தில்கொண்டு, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். இது காலத்தின் வலியுறுத்தல் மட்டுமல்ல தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும்கூட. ஆனால், இந்த நிலைமையை தமிழினம் சந்திப்பது இதுதான் முதல் தடவையுமல்ல. இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டபோதெல்லாம் வேற்றுமை துறந்து – பகைமை மறந்து – பேதமை களைந்து – முரண்கள் நீங்கி தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டார்கள். சில சமயங்களில் கட்சிகளாக – அமைப்புகளாகப் பிரிந்து நின்றாலும் உடன்பாட்டளவிலாவது ஒன்றாகி – ஒற்றுமையை வெளிப்படுத்தினார்கள்.**

**அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுடன் இணைந்து செயற்படமுடியாது என்ற முடிவுக்கு தந்தை செல்வா வந்தபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அக்காலத்தில் திருகோணமலையில் ஓர் ஆசனத்தை மட்டுமே பெறக்கூடிய நிலை இருந்தது. இன்னொரு தமிழ்க்கட்சி போட்டியிட்டால் அந்தப் பிரதிநிதித்துவம் பறிபோய்விடக்கூடிய சூழல் காணப்பட்டது. எனவே அங்கு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடாமல் தவிர்த்தது. இதேபோல 1970களில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக வேண்டும் என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டபோது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி உருவானது.**

**சில காரணங்களை முன்வைத்து இந்தக் கூட்டிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியது. எஞ்சிய இரு கட்சிகளும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியபோதும், உடன்பாட்டளவில் அவை ஒன்றாகவே செயற்பட்டன. இதனால்தான் "தேர்தலில் கொழும்பில் சேவல் கூவட்டும், வடக்கு – கிழக்கில் சூரியன் உதிக்கட்டும்", என மேடைகளில் இருசாராராலும் முழங்க முடிந்தது. போராட்ட அமைப்புகளின் காலத்திலும் ஒற்றுமை ஏற்பட்டது. 1985 இல் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஒன்றிணைந்து ஈ.என்.எல்.எவ். என்ற பெயரில் ஒன்றாக செயற்பட்டார்கள். அதற்கு முன்னர், உடன்பாட்டளவில் ஆயுதங்களை பரிமாறி போர்களில் ஈடுபட்டார்கள்.**

**2000ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முயன்றபோது, பரஸ்பரம் துப்பாக்கியால் பேசிக்கொண்ட ரெலோவையும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வையும் அரவணைத்தே சென்றார்கள். காலத்துக்கு காலம் இவ்வாறான ஒன்றிணைவுகள் – உடன்பாடுகள் சாத்தியமாகியே வந்துள்ளன. தமிழினத்தின் நன்மைகள் – மக்களின் நலன்கள் கருதியே இவ்வாறான முடிவுகள் எட்டப்பட்டன. இதன்போது பல விட்டுக் கொடுப்புக்கள் – சமரசங்கள் – இணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.**

**இப்போதும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை – பேதமைகளை – முரண்பாடுகளைகளைந்து, தமிழ் மக்களின் நலன்களை – நன்மைகளைக் கருத்தில் கொண்டு ஒன்றிணைய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது விடுத்துள்ள அழைப்பை ஏற்று – பொது உடன்பாடுகளை ஏற்படுத்தி – கூட்டு ஜனநாயகத் தலைமையை ஏற்படுத்தி ஓரணியாக செயற்பட முன்வரவேண்டும். ஆனால், இது வெறுமனே தேர்தல் கால கூட்டணியாக அமையாமல், தமிழ் மக்களுக்கு விடிவைத்தரவல்ல தீர்வைப் பெற்றுத்தருவதற்கானதாக இருக்கவேண்டும் என்பதை நினைவில்கொண்டும் செயற்படவேண்டும்.**

**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!**

சமூக நோக்கு

ஜெயஸ்ரீ



# தண்ணீரைத் தேடி அலையுமா வடக்கு மாகாணம்?

'நீர் இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"
– தெய்வப்புலர் திருவள்ளுவர் என்றோ கூறி வைத்த பொன்னான கருத்து இது. அதாவது நீர் இல்லாது இந்த உலகியலே நடைபெறாது என்பதை வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி விட்டார். உலகில் உள்ள மனிதர்களுக்கு மாத்திரமின்றி சகல ஜீவராசிகளுக்கும் நீர் மிகவும் அத்தியாவசியமானது. காலச் சக்கரத்தின் சுழற்சியில் உலகில் நீர் குறைந்து வருவதாக ஆய்வாளர்கள் பல வருடங்களுக்கு முன்பே எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், இந்த எச்சரிக்கையை செவிமடுத்து நீரை சிக்கனமாகப் பாவிக்கிறார்களா என்று நோக்கினால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

உலக நாடுகள் என்று பொதுவாக நோக்குவதை விடுத்து இலங்கையை எடுத்துக் கொண்டாலும் நீரின் பாவனை அதிகமாகவே உள்ளது. நீரின் பாவனை என்று கூறுவதை விட, நீரின் விரயம் என்று கூறுவதே சாலப் பொருத்தமாக இருக்கும். ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு தனி மனிதனும் பாவிக்கும் நீரை விட விரயமாக்கும் நீரின் அளவே அதிகம் என்று கூறினால் அது மிகையல்ல. மனிதனின் வசதி வாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்லச் செல்ல நீரின் தேவையும் அதிகரித்துச் செல்கிறதே தவிர குறைந்து வருவதாக இல்லை. முன்னைய காலத்தில் எமது மூதாதையர்கள் கிணறு, குளம், ஆறு போன்றவற்றில் இருந்து நீரைப் பெற்றுத் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றினர். ஆனால், இன்றோ குளங்களிலும் ஆற்றிலும் நீரை மழைகாலம் தவிர்த்துக் காண்பதே அரிதாகி விட்டது. கிணறுகளில் இருக்கும் நீரையும் வாளிகள் மூலம் அள்ளிப் பயன்படுத்துவது என்பதே எமக்குப் பெரும் கடினமாகத் தெரிகிறது. மோட்டர்கள் மூலம் நீரைத் தாங்கியில் ஏற்றி குழாயைத் திறந்ததும் நீர் வரவேண்டும் என்ற அற்ப விடயத்திற்கே அனைவரும் அடிமைகளாகி விட்டோம். சகல தேவைகளுக்கும் குழாய்களைத் திறந்து பயன்படுத்தும்போது தேவையைக் காட்டிலும் விரயமாகும் நீரின் அளவு அதிகமாகவே உள்ளது.

மனிதர்களின் முறையற்ற செயற்பாடுகளால் மும்மாரி பொழியும் காலம் இன்று பொய்த்துவிட்டது. மழைவீழ்ச்சி மிகக் குறைவாகவே கிடைக்கிறது. இவ்வாறான நிலையில் நீரை விரயமாக்குவதால் எதிர்காலத்தில் நீருக்கும் பெரும் பஞ்சம் ஏற்படலாம். நமது வடக்கு மாகாணம் வறட்சி கூடிய மாகாணம். சில இடங்களில் கடந்த பல வருடங்களாகவே நீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. குடிதண்ணீருக்காக பல கிலோமீற்றர்கள் நடக்க வேண்டிய கட்டாயத்தில் இன்றும் மக்கள் இருக்கிறார்கள். இவற்றை சிந்தித்து ஒவ்வொரு தனி மனிதனும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதே எதிர்கால சந்ததிக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் தண்ணீருக்கு தட்டுப்பாடு விரைவில் வரும் என்று சுற்றுச்சூழல் முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க சில வருடங்களுக்க முன்னர் நாடாளுமன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார். அதற்கு முன்பே வடக்கு மாகாண அமைச்சரும் சூழலியலாளருமான பொ. ஐங்கரநேசன் இந்த விடயம் தொடர்பில் எச்சரித்திருந்தார். ஆனால் இதைப் பற்றி மக்கள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. வீதிக் கரைகளில் உள்ள பல வர்த்தக நிலையங்கள் தண்ணீர் தெளிக்கிறோம் என்ற பெயரில் வீதிகளையே கழுவுகிறார்கள். தண்ணீர் விரயமாவது குறித்து அவர்கள் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இதேபோன்று நீள்கின்றன நீரை விரயமாக்கும் நமது பழக்கவழக்கங்கள்.

ஒவ்வொரு தனிமனிதனும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். தேவைக்கு அதிகமாக நாம் நீரைப் பயன்படுத்தினால் – விரயமாக்கினால் இன்னும் சில வருடங்களில் தண்ணீர் இன்றி அவதியுற நேரிடும். இதனால் எதிர்கால சந்ததியும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. இலவசமாகக் கிடைத்த நீரை நாம் பணம் கொடுத்து வாங்கத் தலைப்பட்டுவிட்டோம். இப்படியே போனால் எதிர்கால நிலை எப்படியிருக்கும் என்பதை சிந்தியுங்கள்...?

உலகில் தண்ணீருக்கு ஏற்பட்டுவரும் தட்டுப்பாட்டை உணர்ந்து அது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் உலகப் புகழ்பெற்ற நீரைச் சிக்கனமாகப் பாவிக்குமாறு அவர் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது போன்ற விழிப்புணர்வு நடவடிக்கைகள் எமது நாட்டுக்கும் தேவையாகும்.

அரசியல்



# தியாக வரலாறுகள் மீது அரசியல் செய்யாதீர்கள்!

ஈழவன்

இன்று சிலர் மாவீரர் நாளன்று காலை முதல் மாலை வரை குடாநாட்டின் பல இடங்களுக்கும் ஓடி ஓடி சுடர் ஏற்றுவதும் அஞ்சலி செய்வதுமாக புதியதொரு முறையை உருவாக்க எத்தனிக்கிறார்கள். இவ்வாறு ஓடி ஓடி நடத்தும் அஞ்சலி நிகழ்வுகளை படம் பிடித்து வெளியிட்டு அதை தமது அரசியலுக்கான ஆதாயமாக்க முற்படுகிறார்கள்.

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ராஜபக்ஷ குடும்பத்தின் கைகளில் ஆட்சி அதிகாரம் சென்றதன் பின்னர் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் தாயகம் எங்கும் கடந்த 27ஆம் திகதி மிகச் சிறப்பாக – உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

ராஜபக்ஷ சகோதரர்களின் அரசின் கீழ் மாவீரர் தின நிகழ்வுகளை இம்முறை நடத்துவதற்கு பெரும் அச்சுறுத்தல் – மிரட்டல் – நெருக்கடி நிலை – ஏற்படும் என்று இருந்த ஒரு மாபெரும் எதிர்பார்ப்பு தகர்த்தெறியப்பட்டு மிகச் சாதாரணமாக மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் தாயகத்தில் நடந்து முடிந்திருக்கின்றன.

ஒரு சில இடங்களில் இராணுவ நெருக்குவாரங்கள் இருந்தபோதிலும் அவை மக்களை கடும் அச்சத்துக்குள்ளாக்கும் வகையில் இல்லாமையால் அந்த இடங்களிலும் ஒருவாறு அஞ்சலி நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. எந்த ஓர் இடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு இராணுவ கெடுபிடிகளால் நிறுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை. அந்தஅளவுக்கு இம்முறை ராஜபக்ஷ ஆட்சியில் மாவீரர் தின நிகழ்வுகள் சர்வசாதாரணமாக நிகழ்ந்திருக்கின்றன.

ராஜபக்ஷ அரசும், இராணுவமும் இம்முறை மாவீரர் தின நிகழ்வுகளில் தலைப்போட்டு அவற்றை சர்ச்சைக்குரியவையாக மாற்ற எத்தனிக்கவில்லை. கடந்த காலங்களில் ராஜபக்ஷ ஆட்சியில் கடைப்பிடித்த கடும் போக்குவாத நடைமுறைகளை அவர்கள் இம்முறை கையில் எடுக்கவில்லை. ஆட்சி அதிகாரத்துக்கு வந்து சில நாள்களே ஆன நிலையில் மாவீரர் தின நிகழ்வு வந்தமையால் அவற்றில் தலைப்போடுவது சிறுபான்மை மக்களை மீண்டும் கெடுபிடிக்கு உள்ளாக்கும் என்பதால் இந்த விடயத்தில் இம்முறை மட்டும் மென்போக்கை கையாளலாம் என்ற முடிவில் புதிய அரசு நடந்துகொண்டிருக்கலாம். அல்லது கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியப் பயணம் அமைவதால், இங்கு மாவீரர் தினத்துக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தி எதிர்ப்புகளை சம்பாதித்து இந்தியாவுக்கு சென்று அங்கும் வாங்கிக் கட்டவேண்டிய நிலை ஏற்படுமோ என்ற அச்சமும் புதிய அரசுக்கு இருந்திருக்கலாம். ஆனபடியால் அது இம்முறை மாவீரர் தின நிகழ்வை மக்கள் அமைதியாக அனுஷ்டிக்க வழி வகுத்திருக்கலாம்.

எவ்வாறாயினும் இவ்வருட மாவீரர் தின அஞ்சலி நிகழ்வுகள் எதிர்பார்க்கப்பட்ட கெடுபிடிகள் எதுவுமின்றி அமைதியாக – அர்த்தம் மிக்கதாக நிறைவடைந்திருக்கின்றன.

ஆனாலும் இந்த தியாக வரலாறு களின் மீது தமது அரசியல் கைவரிசை யைக் காட்டுவதற்கு எம்மவர்கள் தயங்கவில்லை என்பதுதான் இப்போது வெட்கக்கேடான விடயம்.

ஓர் இனத்தின் விடுதலை வேட்கைக்காக – அந்த இனத்தின் போராட்டம் வரித்துக்கொண்ட உயர்ந்த இலட்சியத்துக்காக தமது உயிர்களை ஆகுதியாக்கி அந்த விடுதலைத் தீயில் குளித்த வீர மறவர்களின் தியாக வரலாறுகளை எம்மினம் எப்போதும் மறந்துவிடாது. ஊனின்றி, உறக்கமிழந்து, வெயில், மழை பாராது எம்மினத்தை காப்பதற்காக வெட்ட வெளிகளிலும், காடுகளிலும், கடலிலும் அவர்கள் கொடுத்த உயிர் விலைகள் ஏராளம். அந்த தியாகம் நிறைந்த உரிமைப் போராட்டத்தின் புனிதத் தன்மையை கெடுக்கும் வகையில் இன்று சிலர் இங்கு செயற்பட முனைவது வேதனைக்குரியதும் வருந்தத்தக்கதும் ஆகும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்தே மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கென்று சில ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மாவீரர் தினமான 27ஆம் திகதி அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாலை 6.05 மணிக்கு மணி ஒலிக்கப்பட்டு சுடர் ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். அன்றைய தினம் காலை முதல் நண்பகல் வரை மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுவது வழக்கமாகும். இதுதான் புலிகள் காலத்தில் இருந்த மாவீரர் நாள் நினைவேந்தல் நடைமுறை.

ஆனாலும் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குப் பின் நடக்கும் மாவீரர் தின ஏற்பாடுகளில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டு வரலாறு மாற்றப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்றால் போல் விரும்பிய நேரங்களில் விரும்பிய இடங்களில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தி அவற்றைப் படம் பிடித்து முகநூல்களிலும், இணையத்தளங்களிலும் வெளியிட்டு இந்தப் புனித வரலாற்றை தமது பிரசாரத்துக்கான ஒரு நிகழ்வாக மாற்ற முனைவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவ்வாறு செய்ய முற்படுவது அந்த தியாகச் செம்மல்களுக்கு நாம் செய்யும் பெரும் துரோகமும் அவமானமும் ஆகும்.

ஒரு தலைமையின் கீழ் ஓரணியில் திரண்ட அவர்கள் இறுதிவரை தமது போராட்டத்தில் எவ்வாறு உறுதியாய் இருந்தார்களோ – தமது மறவர்களின் தியாகம் நிறைந்த நினைவேந்தலை எவ்வாறு கடைப்பிடித்தார்களோ அதை தொடர்ந்தும் நிலைகுலையாமல் கட்டிக்காப்பது எமது கடமையும் பொறுப்புமாகும்.

இன்று சிலர் மாவீரர் நாளன்று காலை முதல் மாலை வரை குடாநாட்டின் பல இடங்களுக்கும் ஓடி ஓடி சுடர் ஏற்றுவதும் அஞ்சலி செய்வதுமாக புதியதொரு முறையை உருவாக்க எத்தனிக்கிறார்கள். இவ்வாறு நடத்தப்படும் அஞ்சலி நிகழ்வுகளில் ஆகக் கூடுதலாக நான்கு அல்லது ஐந்து பேர்களே பங்கேற்கிறார்கள். இவ்வாறு ஓடி ஓடி நடத்தும் அஞ்சலி நிகழ்வுகளை படம் பிடித்து வெளியிட்டு, அதை தமது அரசியலுக்கான ஆதாயமாக்க முற்படுகிறார்கள்.

விடுதலைப் போராட்டம் என்பது அதி உச்ச தியாகம் நிறைந்தது. அதனை இவ்வாறு அரசியலுக்காக – தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்காக பயன்படுத்துவது மிகக்கேவலமான – கீழ்த்தரமான செயலாகும்.

எதிர்காலத்தில் இவை தவிர்க்கப் படவேண்டும் என்பதே மக்கள் பலரதும் எதிர்பார்ப்பு. இதை சிலர் பகிரங்கமாகவும் சொல்லி யிருக்கிறார்கள்.

எனவே, காலை முதல் மாலை வரை ஓடி ஓடி சுடர் ஏற்றும் விளையாட்டுக்களை நிறுத்திவிட்டு எதிர்காலத்தில் அந்த மாவீரர் தினத்தின் புனிதத்தை உணர்ந்து அதற்கென இருக்கும் நடைமுறையின் கீழ் மாலையில் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட நேரத்தில் துயிலும் இல்லங்களிலோ, நினைவுத் தூபிகளிலோ, பொது இடங்களிலோ சுடரேற்றி அந்த வீரமறவர்களுக்கு அஞ்சலி செய்வதே விடுதலைப் போராட்டத்துக்கு நாம் தொடர்ந்து செய்யும் உன்னத பங்களிப்பாகும். •

அரசியல்

# பிளவுபடும் கூட்டணிகள் : ஆபத்தில் தமிழர் நலன்கள்!

சாதாரணன்

ஜனாதிபதி தேர்தல் இந்நாட்டில் தமிழர்களுக்கு ஆழமான படிப்பினையை தந்து சென்றது. ஆனால், இந்தப் படிப்பினையில் இருந்து தமிழ்த் தலைமைகள் பாடம் கற்கத் தவறிவிட்டதாகவே தெரிகிறது. இதனால்தான் தமிழின இருப்பை வேரறுக்கும் செயல்களை தமிழ்த் தலைமைகள் முன்னெடுக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் தீர்மானிக்கும் சக்தி சிறுபான்மையினரே – தமிழர்களே என்ற இறுமாப்புடனே தமிழ்த் தரப்புக்கள் இருந்தன. இந்த இறுமாப்புக்கு சிங்கள – பௌத்த தீவிர சக்திகள் சாவுமணி அடித்து விட்டன. சிறுபான்மையினர் பெருவாரியாக சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த போதும், அவர் தோல்வியையே சந்தித்தார். சிங்கள – பௌத்த தீவிர சக்தியாகத் தன்னை வெளிப்படுத்திய கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதி ஆனார்.

இதனால், தீவிர சிங்கள – பௌத்தரான கோட்டாபய ராஜபக்ஷ மேலும் தீவிரமாகியுள்ளார். அவரின் இந்தப் போக்கை சிறுபான்மையினர் – தமிழர்கள் பெரும் அச்சுறுத்தலாகவே கருதுகின்றனர். அவர் பதவியேற்ற ஒரு வாரத்துக்கு உள்ளாகவே இராணுவத்தினர் வீதிகளில் ஆயுதங்களுடன் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் அச்சநிலையை – ஒருவித பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது. மேலும், கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களிக்காது விட்டதன் மூலம் தாம் பழிவாங்கப்படுவோமா? என்ற எண்ணமும் இப்போது மேலோங்கியுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க, ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையினர் ஒன்றிணைந்து வாக்களித்ததன் மூலம் ஒரு அழுத்தமான செய்தியைப் பதிந்தனர். சிறுபான்மையினர் ஓரணியில் திரள வேண்டும் என்பதே அந்தச் செய்தி. ஆனால், இனவாத அரசியலை வைத்தே பிழைப்பு நடத்தும் மூன்று சிறுபான்மை இனங்களின் கட்சித் தலைமைகளும் தமது பேதங்களை – சுயநலன்களை மறந்து ஒன்றிணைவது அசாத்தியம் எனக் கருதப்படும் சூழலில் குறைந்த பட்சம் தமிழ்த் தேசியக் கட்சிகளாவது இணைந்து – ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கி செயலாற்ற முன்வர வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவே தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற்று வாழவோ, குறைந்தபட்சம் மாகாண சுயாட்சியை வலியுறுத்தவோ பலமான சக்தியாக இருக்கும். இந்நிலையில், ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியும் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக தமக்குள் அடிபட்டு – குத்துப்பட்டு – பிளவுபட்டே நிற்கின்றன. அவர்களின் இந்தச் செயல் தமிழ் மக்களின் நலன்களைக் காலில் போட்டு மிதிப்பதாக உள்ளது.

எது எப்படி இருப்பினும் இன்னும் 4 அல்லது 5 மாதங்களில் நாடாளுமன்ற தேர்தலை நாடு சந்திக்க வுள்ளது. இதன்போது வடக்கு – கிழக்கில் குறைந்தது ஐந்து முனைப் போட்டி நிலவும் சூழல் உள்ளது. தமிழர் தாயகத்தில் அதிக ஆசனங்களைக் கொண்டது யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமே. 9 ஆசனங்கள் என்ற நிலை 7 ஆகி, இப்போது 6 என்ற எண்ணிக் கைக்கு வந்துள்ளது. இது வெறும் உதாரணம் மட்டுமே. அம்பாறை திருகோணமலை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் என்பது கல்லில் நார் உரிப்பதாகி விடும்.

இப்படியான சூழலில் ஒன்றுபடுதல் பற்றி சிந்திக்காமல் தமிழரின் நன்மையைப் பற்றி யோசிக்காமல் தனித்துக் காவடி தூக்கும் நிலைமையிலேயே தமிழ்க் கட்சிகள் உள்ளன. ஆனால், இவர்கள் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். தமிழருக்கான பரந்த கூட்டணி – அரசியல் பலம் தேவை என்பதை விடுதலைப் புலிகள் உணர்ந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது. இதன்போது தங்களுக்கு எதிராக – அவர்களுக்கு எதிராக துப்பாக்கிகளை நீட்டிய, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளை அரவணைக்கத் தவறவில்லை. அவர்கள் ஒட்டுமொத்த தமிழினத்தின் நன்மைக்காகவும் உரிமைகளுக்காகவும் பகைவர்களாகக் கருதியோரையும் இணைத்துக் கொண்டு செயலாற்றினர்.

இன்று காலம் தந்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்க் கட்சிகள் ஒரு கூட்டமைப்பாக ஒன்றாக வேண்டும். புலிகளின் ஆயுத பலம் இல்லாத புறச்சூழலில் இத்தகைய ஒன்றுபடுதலே தமிழரின் ஒன்றுபட்ட பலமாக இருக்கும். இதை உணர்ந்தும், கட்சி நலன்களே, தனிப்பட்ட கொள்கைகளே முக்கியம் எனக் கருதி தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய மறுத்தால் அவர்கள், தமிழ் மக்களின் நலன்களை மட்டுமல்ல தங்களின் நன்மைகளையும் அழித்துக் கொள்ளவே நேரிடும்.

---

# கமல் எனும் அசல்…

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாங்கள் வாழ்ந்த சூழல், பார்த்த சம்பவங்கள், அறிந்த மனிதர்கள் இவையெல்லாம் அப்படியான படைப்புகளுக்கு பிரதானமான காரணங்களாகச் சொல்லலாம். ஆனால் இவர்களது மண் சார்ந்த படைப்புகள் வெளிவருவதற்கு முன்னால் 2004ஆம் ஆண்டிலேயே விருமாண்டி படத்தை இயக்கிவிட்டார் கமல். தனது வாழ்க்கையின் பெரும்பாலான நேரத்தைப் படப்பிடிப்புத் தளத்தில்தான் செலவிட்டார் என்று கூறலாம். மேலும் அதற்கான தயாரிப்பிலும் யோசனையிலும் பாதி நேரம் கழிந்திருக்கும். அப்படியிருக்க, அவருக்கு சம்மந்தமில்லாத கதைக்களத்தைக் கையாண்டு அதை மிகுந்த கவனத்துடன் உண்மைக்கு நெருக்கமாகப் படைத்துக்காட்டியது நிச்சயம் ஆச்சரியம்தான்.

தமிழ்நாட்டளவில் விருமாண்டி என்றால், ஹே ராம் திரைப்படம் மூலம் இந்தியா முழுவதும் கவனம் கோரும் வகையான ஒரு கதைக்களத்தை எடுத்து சுதந்திரத்துக்கு முந்தைய காலகட்டத்தைத் திரையில் உருவாக்கினார் கமல். மேற்கூறியபடி இந்த இரண்டு படங்களையும் கமல் இயக்கியதோடு நிறுத்திக்கொண்டு அவர் ஏற்று நடித்த கதாபாத்திரங்களில் வேறு சிறந்த நடிகர்களை நடிக்க வைத்திருந்தால் இன்னும் அதன் வீச்சு அதிகமாக இருந்திருக்குமோ எனத் தோன்றுகிறது.

**கமல் ஒரு ஆய்வு மாணவன்!**

ஒரு படம் வெற்றி பெற்றுவிட்டால் அலுவலகத்தைவிட்டு வெளியே வராமல் உட்கார்ந்த இடத்திலேயே அடுத்த படத் தயாரிப்பில் ஈடுபடும் இயக்குநர்கள் தமிழ் சினிமாவில் அதிகம். அப்படியிருக்க உச்ச நட்சத்திரமாக வலம் வரும்போதும் தனது படைப்புக்காக ஒரு ஆய்வு மாணவன் போல் செயல்படுவது கமலின் பாணி. ஒரு நடிகருக்கு இதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது என்ற கேள்வி எழுவது இயல்புதான். கமல் தன்னை எப்போதும் அறிவுசார் நபர்களோடு இணைத்துக்கொண்டே இருக்கிறார். பண்பாட்டு ஆய்வாளர் தொ. பரமசிவன், பேராசிரியர் ஞானசம்பந்தன், கவிஞர் புவியரசு, இயக்குநர் சுகா உள்ளிட்ட பலருடன் நெருங்கிய நட்பு பாராட்டும் கமல் தனது அறிவுப்புலத்தைத் தொடர்ந்து விரிவுபடுத்திக்கொண்டே இருக்கிறார். அதனாலே ஒரு காலகட்டத்தை, குறிப்பிட்ட பகுதி மக்களின் வாழ்வியலை அவரால் கையாள முடிகிறது எனலாம். வாசிப்பை விடாமல் தொடர்ந்து வருகிறார்.

அதேசமயம் தொழில்நுட்ப ரீதியாகவும் கமல் தொடர்ந்து தன்னை புதுப்பித்துக்கொண்டுவருகிறார். உண்மையில் தமிழ் சினிமாவில் கமல் மூலமாகவே பல மாற்றங்கள் விரைவில் சாத்தியப்பட்டுள்ளன. லைவ் சவுண்டு, டிஜிட்டல் கேமரா, அனிமேஷன் ஷ ாட்டுகள் மூலம் கதையை நகர்த்துதல் என ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை கவனித்தால் அதை முதலில் கமல் பயன்படுத்தியதற்கான தகவல் கிடைக்கும். திரையரங்குகளுக்கும் மாற்று அவசியம் என்ற கருத்தைத் திரைத்துறைக்குள் இருந்துகொண்டே முழங்கிய உச்ச நட்சத்திரம் இவர் மட்டுமே.

**கமல் பேசும் அரசியல்!**

நடிப்புக்காக எவ்வளவு வேண்டுமானாலும் தன்னையே வறுத்திக்கொள்வதும், தொழில்நுட்ப ரீதியாக திரைப்பட உருவாக்கத்தில் உள்ள அத்தனை துறை பற்றிய அறிவும், ஆய்வாளர்கள், எழுத்தாளர்களோடு கொண்டுள்ள தொடர்பும், வாசிப்பும் ஒருபுறம் இருந்தாலும் கமல் தனது படங்களில் பேசும் அரசியல் பெரும் விமர்சனங்களுக்கு உரியவை.

எல்லாம் தெரிந்த கமலுக்கு தேவர் மகன் திரைப்படம் தென் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய பாதிப்புகள் பற்றித் தெரியாததுதான் கேள்வியை எழுப்புகிறது. விஸ்வரூபம் திரைப்படம் இஸ்லாமியர்களிடையே ஏற்படுத்திய அதிருப்தியை, அதன் பின்னால் உள்ள அரசியலை , 'கமல் ஒரு மகா கலைஞன்' என்றுகூறி மட்டும் எளிதாக கடந்து போய்விட முடியாது. விருமாண்டியில் மரணதண்டனைக்கு எதிராகப் பேசும் கமல் உன்னைப் போல் ஒருவனில் தீவிரவாதத்துக்கு பதில் தீவிரவாதம் என பேசுவார். இளம் இயக்குநர்கள் சாதியைத் தனது படங்களின் பெயர்களுக்குக் கொண்டுவருவதை தவிர்த்தபோது 'சபாஷ் நாயுடு' என வண்டியைப் பின்னோக்கி இழுப்பார். இவ்வாறு அவர் மீது பல விமர்சனங்களும் உள்ளன.

திரைத்துறையிலிருந்து அரசியல் பக்கம் நகர்ந்துள்ள கமல் 25 ஆண்டுகளுக்குப்பின் தற்போது தேவர் மகன் பிரச்னைக்கு வருத்தம் தெரிவித்துள்ளார். காலதாமதமாக நிகழ்ந்தாலும் இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இலைமறை காயாகத் திரைப்படங்கள் வாயிலாக தனது அரசியலை முன்வைத்த கமல், அதற்கே பலத்த எதிர்ப்பையும் விமர்சனத்தையும் சந்தித்தார். இருபத்து நான்கு மணிநேரமும் அதை தொழிலாகச் செய்யக் கிளம்பியுள்ள அவர் தன் தவறுகளை, சறுக்கல்களை சரி செய்துகொள்ளவேண்டிய நேரமும் இது.

இப்படிச் சில உறுத்தல்கள், விமர்சனங்கள் இருந்தாலும், தீராத தாகமும் தேடலும் அசாத்திய உழைப்பும் கொண்ட இந்தக் கலைஞனின் 60 ஆண்டுக் காலப் பயணம் தமிழின் பெருமைமைமிகு நிகழ்வுகளில் ஒன்று என்று சொல்வதில் மிகை இருக்காது.

உலக வரலாறு



சுபகுணம்

# உலகப் பேரழிவு எப்படி இருக்கும்?

## வெயிலுமில்லை, நிலவுமில்லை காட்டிச் சென்றது தம்போரா...!

கிராமமே சிதறி ஓடிக்கொண்டிருந்தது. 1,600 மைல்களுக்கும் அப்பால் வரை கேட்ட பெருவெடிப்பின் சத்தத்தைவிட அங்கிருந்த மரண ஓலங்களின் ஓசை அனைவரின் காதுகளையும் அச்சத்தால் அடைத்துக்கொண்டிருந்தது.

"நான் ஒரு மோசமான கனவை நிஜத்தில்
கண்டேன்
பிரகாசமான சூரியன் தொலைந்துவிட்டது
ஒளியற்ற, வழியற்ற, எல்லையற்ற
இருண்ட விண்வெளிக்குள் நட்சத்திரங்கள்
மறைந்துவிட்டன...
நிலவொளியும் மங்கிக் காணாமல் போய்விட்டது.
சூழ்ந்திருந்த புகையால் குளிர்ந்திருந்த
குருட்டுப் பூமி
கறுப்படித்த காற்றுக்குள் ஊஞ்சலாடிக்
கொண்டிருந்தது;
தினந்தினம் 'காலை' வந்தது; போனது
பூமிவாசிகளுக்கு விடியல் மட்டும் வரவேயில்லை
அனைவரும் உயிரற்று, உணர்ச்சியற்றுப்
போயிருந்தார்கள்
எங்களிடம் மிஞ்சியிருந்தது என்னவோ
ஒளி வேண்டிச் செய்த சுயநலப் பிரார்த்தனைகள்
மட்டுமே!"

- பைரன் (Lord Byron)


*1816 ஆம் ஆண்டு ஜூலை மாதம், பைரன் (Byron) என்ற ஆங்கிலக் கவிஞர், தன்னுடைய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் அவர் கண்ட பூமியின் பேரழிவை இப்படி விளக்கியிருக்கிறார். அவருடைய கவிதையில், "சூரியன் தொலைந்துவிட்டது, நட்சத்திரங்கள் மறைந்துவிட்டன, நிலவொளியைக் காணவில்லை", என்று கூறியிருப்பவை யாவும் பேரழிவைக் குறிப்பதற்கான, கவிக் கற்பனாவாதம் கிடையாது. அனைத்துமே அவர் கண்களால் கண்டு, வேதனைகளை உணர்ந்து எழுதிய உண்மை வரிகள். ஆம், சூரியன் தொலைந்துவிட்டது. பூமி புகையால் சூழப்பட்டு, குருடாகிவிட்டதைப் போன்ற பிரமையில் சிக்கியிருந்தது. சூரிய ஒளியின்றி வறண்டிருந்த நிலங்களில், பயிர்கள் மடிந்து பசி, பஞ்சத்தைப் பரப்பிவிட்டு, மனிதர்கள் உயிரைப் பறித்துக் கொண்டிருந்தது. அனைவரும் உணர்ச்சியற்றுப் போயிருந்தார்கள்.*

*1816 ஆம் ஆண்டு. பூமியின் மக்கள் தொகை பெருமளவு, விவசாயத்தையே சார்ந்திருந்தது. அறுவடைகளே அவர்களின் வாழ்வைச் செழுமை யாக்கிக் கொண்டிருந்தன. அப்படிப்பட்டதொரு வாழ்க்கை முறையில், அறுவடை தோல்வியடைவது, அதுவும் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு என்பது பெரிய இழப்புதான். அதுவே உலகம் முழுக்க ஒரே நேரத்தில் நிகழ்ந்தால், அது மிகப்பெரிய பேரழிவைப் போன்றது. அப்படியொரு பேரழிவு நிகழ்ந்தது.*

*பூமியின் கடந்த 10,000 ஆண்டுகால வரலாற்றில் நடந்த மிகப்பெரிய எரிமலை வெடிப்பு. பஞ்சகால நோய்களான கொலரா, டைபஸ் போன்றவை, உலகம் முழுக்கப் பரவிக்கொண்டிருந்தன. சீனாவிலிருந்து அயர்லாந்து வரை உணவின் விலை, சந்தைகளில் மக்கள் தங்கள் குழந்தைகளை விற்கவேண்டிய அளவுக்கு எகிறியது.*

*ஏற்கனவே ஐரோப்பிய கண்டம் நெப்போலியனின் படையெடுப்புகளால் பாழாகிக் கிடந்தது. கூடவே, பேரழிவும் சேர்ந்து இறப்பு எண்ணிக்கையை அதிகப்படுத்தியது. இலட்சக்கணக்கான படைவீரர்கள், தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். 1816 ஆம் ஆண்டு புதிய இங்கிலாந்துக்கு, '1800-மரணக்கூடம்' என்ற பட்டப்பெயர் சூட்டப்பட்டது. 1817 ஆம் ஆண்டை, ஜேர்மனியர்கள், 'பிச்சைக்காரர்களின் ஆண்டு' என்றழைத்தனர். இந்தியாவில் 1817ஆம் ஆண்டு ஏற்பட்ட வங்காளப் பஞ்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தனர். இந்தியா முழுக்கப் பஞ்சகால நோயான கொலரா, பெருநாசத்தையும் பெரியளவிலான உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியது.*

*இந்தப் பேரழிவுகள் அனைத்துக்குமான காரணங்களாக, அந்தக் காலகட்ட அறிவியல் கட்டுரைகள், நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள் என்று அனைத்தும் சொல்வது ஒன்றை மட்டுமே. கோடையற்றுப் போன, பூமியில் சூரிய ஒளியே இல்லாத, இன்னும் சொல்லப்போனால் பகலே இல்லாத 1816 ஆம் ஆண்டுதான் இந்தப் பேரழிவுகளுக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. அந்த ஆண்டு, மனித வரலாற்றில் 'கோடைக்காலமற்ற*




வெள்ளைக் கோட்டால் காட்டப்பட்ட பகுதி எரிமலை வெடித்தவுடன் சாம்பல் புகைமண்டலம் பரந்த இடம்.

ஆண்டு (Year Without Summer)' என்று அழைக்கப்படுகிறது. அந்தக் காலகட்டத்தில் பூமி அழியப் போகிறது என்ற அளவுக்கு மக்கள் அச்சத்துக்கு ஆளாகியிருந்தார்கள். அப்படியொரு அச்சம் ஏற்படும் அளவுக்கு 1816 -18 ஆண்டுகளுக்குள் மில்லியன் கணக்கான மக்கள் மடிந்தனர்.

உலகத்திற்குக் கிடைக்கும் சூரிய ஒளியையே மறைக்கும் அளவுக்கு இவ்வளவு பெரிய பேரழிவா? அப்படியென்ன நடந்தது?

இந்தக் கேள்விக்கான விடை, ஓர் எரிமலை வெடிப்புக்குள் அடங்கியுள்ளது. பூமியின் கடந்த 10,000 ஆண்டுக்கால வரலாற்றில் நடந்த மிகப்பெரிய எரிமலை வெடிப்பு.

சும்பாவா தீவு. அப்போது டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டுப்பாட்டிலும், இப்போது இந்தோனேசியாவின் ஒரு பகுதியாகவும் இருக்கும் நிலப்பகுதி. அங்கு தம்போரா என்ற கிராமத்தில் அமைந்துள்ளது அந்த எரிமலை. அந்த எரிமலையின் பெயரும் தம்போராதான். 1815 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி தம்போரா வெடித்தது. பொதுவாக, எரிமலைகள் இரண்டு விதமாகத் தீக்குழம்பை வெளியேற்றும். பானை பொங்கி வழிவதைப் போல், தீக்குழம்பு எரிமலையிலிருந்து பொங்கிவரும். இரண்டாவது, தீக்குழம்பு எரிமலையிலிருந்து வெடித்துக் கிளம்பும். முதலாவது நடக்கும் போதாவது தப்பிக்க நேரம் கிடைக்கும். இரண்டாவதில் கிடைக்கும் நேரம் மிகவும் குறைவு. தம்போரா கிராமத்து மக்களும், அப்படித்தான் அன்று தப்பிக்க நேரமின்றிச் சிக்கியிருந்தார்கள். ஹிரோஷிமா அணுகுண்டு வெடித்ததைப் படங்களிலாவது பார்த்திருப்போம். அதுவே, இந்தப் பெருவெடிப்புக்கு குழந்தைதான் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆம், ஆய்வாளர்களின் கணக்குப்படி, ஹிரோஷிமாவில் வெடித்ததுபோல, சுமார் 16,000 குண்டுகள் வெடித்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்திருக்கிறது இந்த எரிமலை வெடிப்பு.

பைரனின் எழுத்துகளிலிருந்து எரிமலை வெடித்தபோது இருந்த நிலைமையைப் புரிந்து கொள்ள முடிகிறது. பலரும் நம்பிக்கையின்றித் தங்கள் புருவங்களை உயர்த்தி அந்தப் பெருவெடிப்பு ஏற்படுத்திய பிரகாசத்தை அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெருப்புக் குழம்பு அவர்கள்மேல் படிந்து ஓலமிடக்கூட நேரம் கொடுக்காமல் சாம்பலாக்கிக் கொண்டிருந்தது. கிராமமே சிதறி ஓடிக்கொண்டிருந்தது. 1,600 மைல்களுக்கும் அப்பால் வரை கேட்ட பெருவெடிப்பின் சத்தத்தைவிட அங்கிருந்த மரண ஓலங்களின் ஓசை அனைவரின் காதுகளையும் அச்சத்தால் அடைத்துக்கொண்டிருந்தது. பலர், எரிந்து கொண்டிருந்த உடலோடு சூடு தாங்காமல் துடித்தபடி ஓடிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய இறுதிச் சடங்கு, சூழ்ந்திருந்த நெருப்புக் குழம்புக்குள் தானாக நிகழ்ந்து கொண்டிருந்தது. பிரகாசத்தைத் தொடர்ந்து இருண்டுகொண்டிருந்த வானத்தைச் சிலர் பித்துப் பிடித்ததைப் போல் பார்த்துக்கொண்டிருந்தனர். முழுக்கச் சாம்பலால் போர்த்தப்பட்டுப் பயனற்றுப் போயிருந்த நீரையும் பயிர்களையும் சிலர் வெறுப்போடு வெறித்துக் கொண்டிருந்தார்கள். சிலர், எரிமலையைச் சபித்தப்படி, பற்களை நறநறத்தபடி கைகளை விரித்துக்கொண்டு ஓலமிட்டார்கள்.

வெடித்துக்கிளம்பிய தீக்குழம்புகளின் புகைமூட்டம், 40 கிலோமீற்றர் உயர்ந்து வானத்தை முட்டியது. அனல் கக்கும் நெருப்பைச் சூழ்ந்த கரும்புகையோடு, அரக்கனைப் பார்த்ததுபோல் இருந்ததாக இந்தோனேசிய நாட்டுப்புறப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. அன்று ஏப்ரல் 10 ஆம் திகதி, எரிமலை வெடித்தபோது, அதன் தீப்பிழம்புகள் 40 கி.மீ உயரம் வரை தொட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வளவு உயரத்துக்கு எழுந்த தீப்பிழம்பு, வளிமண்டலத்தையே தம்போராவின் புகைமூட்டத்தால் சூழ வைத்தது. 43 கிலோமீற்றருக்கும் மேலே சாம்பல் புகைமூட்டம் உயர்ந்தது.

1,000 பேர், 2,000 பேர் அல்ல. 11,000 பேர் தம்போரா வெடித்துச் சிதறியபோது, பலியானார்கள். இன்று, தம்போரா கிராமத்தின் பழைய படிமங்களைத் தோண்டியெடுத்துக் கொண்டிருக்கும் ஆய்வாளர்களின் கைகள் நடுங்குகின்றன. அவர்களுடைய உடல்களில் கிடைக்கும் ஆதாரங்கள், அவர்களுடைய மரணங்களுக்குச் சாட்சியங்களாக நிற்கின்றன. ஆம், ஒரு கிராமமே இல்லாமல் போனது.

தம்போரா முழுக்க முழுக்க, நீராக ஓடிக்கொண்டிருந்த நெருப்புக் குழம்பினால் சூழப்பட்டிருந்தது. நெருப்பு வெள்ளம் சூழ்ந்திருந்த தீவாகக் காட்சியளித்தது சும்பாவா தீவு. 20 சென்ரிமீற்றர் அளவுக்கு விட்டம் கொண்ட படிகக்கற்கள் எரிமலைக்குள்ளிருந்து வெடித்துச் சிதறி மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. தீவில், கடலும் கரையும் இணையும் விளிம்புவரை முழுக்க முழுக்கச் சாம்பலாகவே படிந்திருந்தது. சுமார் இரண்டு மில்லியன் தொன்கள் கந்தக டை ஒட்சைட்டும், 160 கன கிலோமீற்றர் தீக்குழம்பையும் வெளியே கக்கிய தம்போராவால், நீர்நிலைகள், விவசாய நிலங்கள் என்று அனைத்தும் சாம்பலாகக் காட்சியளித்தன. உணவோ நீரோ எதுவுமே உட்கொள்ளும் வகையில் இல்லை. கால்நடைகள், பயிர்கள், குடிநீர் என்று அனைத்தும் அழிந்தன. உணவின்றி, நீரின்றிக் கொத்துக் கொத்தாக 71, 000 மக்கள் மாண்டனர். தம்போரா எரிமலை வெடித்த அதிர்வினால், நான்கு முதல் ஐந்து மீற்றர் உயரம் வரை சுனாமி அலைகள் எழுந்து, பெரியளவில் நில மற்றும் உடைமைச் சேதங்களை உருவாக்கியுள்ளது. பெரும்பாலான மக்கள் சுனாமிக்குப் பலியானார்கள். பெருவெடிப்பைத் தொடர்ந்து உருவான சுழற்காற்றுக்குப் பலர் பலியானார்கள்.

ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்ற தம்போரா, அதற்கடுத்த நாள்களிலும் தொடர்ந்து சீறிக்கொண்டேயிருந்தது. அதன் கடைசிச் சீற்றமும் கடைசி வெடிப்பும் 1815 ஜூலை மாதத்தோடு முடிவடைந்தது. அதுவரை தன் தீக்குழம்புகளைக் கக்கிக் கொண்டேயிருந்த தம்போராவின் சீற்றத்துக்குப் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை தெளிவாகக் கிடைக்கவில்லை என்றாலும், அதுவும் சில ஆயிரங்களில் இருக்கும் என்று உறுதியாகச் சொல்லப்படுகிறது. எரிமலை வெடித்தபோது வெளியான சாம்பல் நுண்துகள்கள் வளிமண்டலத்தில் மற்ற வாயுக்களோடு சேர்ந்து மேகங்களாகச் சில ஆண்டுகளுக்குத் தேங்கிவிட்டன. அந்தப் புகைத்திரள் கிட்டத்தட்ட 1,300 கிலோமீற்றர் வரை பரவி, மொத்த கிழக்கிந்தியப் பகுதியையுமே இருளுக்குள் மூழ்கடித்தது.

உடனடிச் சேதங்கள் மட்டுமின்றி, வளிமண்டலத்தில் மேகங்களாகச் சூழ்ந்திருந்த சாம்பல் புகை அடுத்து வந்த நாள்களில் பருவகாலங்களைச் சிதைத்தது உணவு உற்பத்தியைக் குறைத்தது, பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த ஒரு பேரிடர், பல்வேறு துணைப் பேரழிவுகளை உண்டாக்கியது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நீடித்த இந்தப் பேரழிவுக் காலத்தின் சேதங்களை அந்தாட்டிக்காவுக்கு அருகிலிருந்து வடக்கு அரைக்கோளத்தில் இங்கிலாந்து வரையிலுமே பார்க்க முடிந்தது.

தம்போரா எரிமலை 1815 ஆம் ஆண்டு வெடித்த பின்னர், இன்றுவரை வரை மூன்று முறை வெடித்துள்ளது. பெருவெடிப்பு முடிந்த அடுத்த நான்கே ஆண்டுகளில் மீண்டும் வெடித்துப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. பின்னர், 1880 ஆம் ஆண்டு வெடித்தது. இவற்றுக்குப் பின், 87 ஆண்டுகள் கழித்து 1967 ஆம் ஆண்டு வெடித்தது.

கடந்த 2011 ஆம் ஆண்டு, இந்தோனேசியாவில் தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கங்களால் மீண்டும் தம்போரா வெடிக்குமென்று எச்சரிக்கப்பட்டது. எச்சரிக்கை வந்த நேரத்திலேயே புகைமூட்டம் 4,600 அடிகள் உயரத்துக்கு அதிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. அதனுடைய தொடர் இயக்கத்தால் மீண்டும் வெடிக்கும் என்று மட்டுமின்றி, அந்த இயக்கத்தின் வீரியத்தால் மீண்டுமொரு கோடையற்ற ஆண்டுகூட வரலாம் என்ற அச்சமும் அந்தப் பகுதி மக்களை பீடித்தது. எச்சரிக்கை கொடுக்கப்பட்டு, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதிர்ஷ்டவசமாக, எதுவும் நிகழவில்லை. தம்போரா புகையை மட்டுமே கக்கிவிட்டு, அடங்கிவிட்டது.

இன்றளவும் சுற்றுலாப் பயணிகள் தம்போராவுக்குச் செல்கிறார்கள். அந்த எரிமலை மீது ஏறுகிறார்கள். அனைவராலும் ஏறக்கூடிய அளவுக்கு அவ்வளவு எளிதாக அந்த மலைப்பகுதி இல்லையென்றாலும், உறுதியான ஆரோக்கியமான உடலமைப்பு கொண்டவர்களுக்கு அது ஒரு சாகசப் பயணமாக இருக்கிறது. சும்பாவா தீவில் வாழும் மக்கள், அந்தப் பேரிடரை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஹஉலகத்தை வரவேற்கும் தம்போரா (Tambora Greets the World)' என்ற பெயரில் ஏப்ரல் 12-18 வரை ஏழு நாள்களுக்குக் கொண்டாடுகிறார்கள்.

2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு, இன்று வரை தம்போரா தூக்கத்திலிருப்பதாகவே கருதப்படுகிறது. எத்தனையோ எரிமலைகள் இன்று இயக்கத்தில் இல்லை என்றும் மரணமடைந்து விட்டதாகவும் (Dead Volcanoes) அழைக்கப்படுகின்றன. ஆனால், தம்போரா இன்னமும் உயிர்ப்போடுதான் இருக்கிறது. இந்தோனேசியா, பல்வேறு கண்டத்தகடுகள் ஒன்றிணையும் பகுதியாக இருப்பதால், அங்கு சுனாமி, எரிமலை வெடிப்பு போன்ற பேரிடர்கள் அதிகம் ஏற்படுகின்றன. தம்போராவும் இன்னும் செயற்பாட்டிலேயே இருப்பதால், மீண்டும் ஏதேனும் பெரிய நிலவியல் அதிர்வுகளின் தூண்டுதலால், எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம். அதனால், தம்போரா தொடர்ச்சியான கண்காணிப்பிலேயே இருந்துவருகிறது. •

நினைவழியா நிகழ்வுகள் – 5



# மாவீரர் நாளும் பாடலும்

நவ. 27 மாவீரர் நாள். மாவீரர் நாள் என்றதுமே, தமிழர் தாயகம் எங்கும் உணர்ச்சி பெருக்கெடுத்துப் பாயும். அந்த உணர்ச்சியை கட்டுக்குள் வைத்து, மனதைக் கனக்க வைப்பதாக ஒலிக்கும், "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய..." மாவீரர்நாள் பாடல். மாவீரர்களை நினைவுகூருவது தொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இவ்வாறான பாடல் ஒன்றின் தேவையை, அப்போதைய மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா முன்வைத்திருந்தார். 1992 மாவீரர் நாள் நினைவேந்தலின் போது கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் வர்ணராமேஸ்வரன் பாடினார். அதேசமயம், ஏற்கனவே இசையமைத்த பாடலும் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பானது. அச்சமயம் அங்கு நின்ற போராளி ஒருவர், இப்பாடல் குறித்து "வெளிச்சம் இதழில்" இக்கட்டுரையை எழுதியிருந்தார். அக்கட்டுரை மீள்பிரசுரமாகிறது.

1992ஆம் ஆண்டின் மாவீரர் நாள் பிறக்கப் போகின்றது. இந்த நாளின் பிறப்பின்போது, நாம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிற்க வேண்டும். இதற்காகச் சென்று கொண்டிருக்கிறோம். பகலிலேயே எங்கோ ஒருவரைத்தான் காணக்கூடியதாக இருக்கும் இராசபாதையில் நள்ளிரவிலும் ஒரே மக்கள் கூட்டம். இந்த வீதியிலிருந்து மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்லும் வீதியில் இன்னும் கூடுதலான மக்கள் திரள்திரளாகச் செல்கிறார்களே.... இவர்கள் கிளாலியை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டமல்ல... நல்லூர் திருவிழா முடிந்ததும் கடலைக் கடைகளுக்கும் ஐஸ்கிறீம் கடைகளுக்கும் வேடிக்கை பார்க்கும் கூட்டமுமல்ல... அனை வருமே உணர்ச்சிப் பிளம்புகளாய் காட்சியளிக்கிறார்கள். சத்தியம் செய்யும் அந்தக் கூட்டத்தினூடேதான் போய்க் கொண்டிருக்கிறோம். இது ஒரு வித்தியாசமான அனுபவம்தான். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின்போதும் மனதுள் ஏதோ ஒன்று... அதை விபரிக்க முடியவில்லை.

"என்ரை ராசா... கிளியண்ணை வந்திருக்கிறார் ஒருக்காப் பார் ராசா...", ஒரு மாவீரனின் சமாதியில் அவர் தாய் அழுதுகொண்டே சொல்லும் வார்த்தைகள் எமது நெஞ்சைப் பிழிகின்றது. கண்ணீர் முட்டுகிறது. கூட வந்தவர்களுக்குத் தெரியாதபடி துடைத்துக் கொள்கிறேன். இப்போதே அழத் தொடங்கினால்.... கஷ்டப்பட்டு கண்ணீரைச் சிக்கனப்படுத்திக் கொள்கிறேன். பின்பு தேவையல்லவா.

வழியில் இந்த ஆண்டு மாவீரர் தினம் பிறக்கும் வேளையில் மணியோசைக்குப் பின் ஒலிக்கவிருக்கும் மாவீரர் பாடலைப் பாடவிருக்கும் வர்ணராமேஸ்வரன் வருகிறார். "ராமேஸ்வரன் எனக்குப் பக்கத்தில நில்லுங்கோ... நீங்கள்தான் எனக்குப் பக்கத்தில நிண்டு பாடுறது.", உரிமையுடன் கட்டளையிடுகிறார் புதுவையண்ணா. இப்படித்தான் நாங்கள் எங்கள் மக்களை வசப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

சுற்றுமுற்றும் பார்க்கிறேன். மாவீரர் சமாதியில் ஊதுவர்த்திகளைக் கொழுத்தியும் மலர் வைத்தும்... எந்த ஒரு ஆலயமும் இந்த மாதிரியான புற அகத் தூய்மையோடு காணப்படுவதில்லை... கண்ணீரைக் கட்டுப்படுத்த சிரமமாயிருக்கிறது. சாதாரணமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளச் சிரமப்படுகிறேன். ஒவ்வொரு விநாடியும் செல்லச் செல்ல மயிர்க்கால்கள் குத்திடுகின்றன.

மாவீரர் துயிலுமில்லத்தில் முதலாவது சுடர் ஏற்றப்படும் இடம் – அந்த நேரத்தை எதிர்பார்த்தபடி மனம் எதையோ தேடுகின்றது. 12.00 மணி. யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் முதலாவது சுடரை ஏற்றுகிறார். எங்கும் ஆலய மணியோசை. தீபத்தில் ஏற்றப்படும் ஒளியைத் தொடர்ந்து எனது கண்கள் எனது கட்டுப்பாட்டை இழக்கின்றன. ஆலய மணியின் ஓசை ஒலிக்கு மட்டும் மௌனமாக நின்று அஞ்சலிக்கின்றோம். ராமேஸ்வரன் பாடுகிறார். இதே பாடல் ஒலிபெருக்கியிலும்... நாம் உறுதியெடுத்துக் கொள்கின்றோம்...

**"வழிகாட்டி எம்மை**
**உருவாக்கும்**
**தலைவன் வரலாறு மீதிலும்**
**உறுதி.**
**விழிமூடி இங்கே துயில்கின்ற**
**வேங்கை வீரர்கள் மீதிலும்**
**உறுதி.**
**இழிவாக வாழோம் தமிழீழப்**
**போரில் இனிமேலும் ஓயோம்**
**உறுதி."**

நான் ஏன் அழுகின்றேன்...

(மறு பக்கம் பார்க்க)



இழப்புகளினால் உரமேறிய தேசமல்லவா... எனது தேசம். ஐயாயிரத்துக்கும் மேலும் சில நூறு பேர்களை இழந்து விட்டோம். இன்னுமா மாறவில்லை. சீலனது வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன. “போராளிகள் மென்மையான மனமுடையவர்கள். மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைக் கண்டு மனம் சகிக்க முடியாதவர்களே போராளியாகின்றனர். அதைத் தாங்கிக் கொண்டு சாதாரணமாக இருக்கக்கூடியவர்கள்தான் போராட்டத்துக்கு வெளியில் நிற்கிறார்கள்.”, எவ்வளவு அச்சொட்டான வார்த்தைகள் இவை. சூழவுள்ள மக்களைப் பார்க்கிறேன். எத்தனை எத்தனை ஆயிரம் சொந்தங்கள் எமக்கு. எல்லோரும் எம்மவர்கள்... ஆனால் அன்று நீயும் ஆனந்தும் எரிக்கப்படும்போது உங்களுக்குப் பக்கத்தில் ஒருவருமே இல்லையே... உனது வீரச்சாவுச் செய்தி கேட்டு திருமலையிலிருந்து பறந்து வந்த உனது அம்மா உனது உடலைத் தரும்படி எவ்வளவு மன்றாடியிருப்பார் சிறீலங்கா இராணுவத்திடம். அவர்கள் உனது உடலைக் கொடுக்கவில்லையே... பௌத்த தர்மம் அதற்கு இடமளிக்கவில்லை... இன்று இந்தத் தேசமே சொந்தம் கொண்டாடுகிறது. நாங்கள் வளர்ந்துவிட்டோம்... எங்கும் போராளிகள் பொதுமக்கள்...

ஒரு தாக்குதலுக்காக யாழ். நகரப் பகுதிக்குள் சென்று கொண்டிருக்கி றோம். மக்கள் நடமாட்டமுள்ள இடத்தில் இராணுவத்தினர் இரண்டு வாகனங்களில் வந்து இறங்குகின்றனர். கம்பீரமான தோற்றத்துடன் தமக்குச் சொந்தமில்லாத மண்ணில் நடமாடுகின்றனர் இராணுவத்தினர். அப்போது நீ சொல்கிறாய், “இதைப் போல நாங்களும் ஆம்ஸைக் கட்டிக் கொண்டு சுதந்திரமா திரிய வேணும் அப்ப அது புதினமில்லாத மாதிரி சனம் போக வேணும்”, எவ்வளவு ஆசையாகச் சொன்னாய். இந்தப் போராட்டம் வெல்லும் நாங்கள் வளர்வோம் என்பதெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதான். ஆனால், இவ்வளவு விரைவாக... எல்லாம் இன்றுபோல் இருக்கிறது.

“உங்களைப் பெற்றவர் உங்களின்
தோழிகள் உறவினர்
வந்துள்ளோம்...”

இதேநேரம் இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் ஏதோ ஒரு இடத்தில் அழுது கொண்டிருப்பார்கள் எனது குஞ்சம்மாவும், குஞ்சையாவும். எனது இளமைக் காலங்கள் நினைவுக்கு வருகின்றன. இவர்களின் மகன் நக்கீரன் (செந்தில்குமரன்) அப்போது பிறக்கவில்லை. (ஆறு பெண் பிள்ளைகளுக்குப் பின்னே இவன் பிறந்தான்.) ஒவ்வொரு பிள்ளையும் பிறக்கும்போது இது ஆண்பிள்ளையாக இருக்காதா என்ற எதிர்பார்ப்பாயிருக்கும். இனி ஆண் பிள்ளையே பிறக்காது. நமக்கு இறுதிக்கடன் செய்ய ஆண்பிள்ளை இல்லையே என்று குஞ்சையாவுக்கு ஒரு ஏக்கம். அதனால் அவர் என்னுடன் கூடியளவு பாசத்துடன் இருந்தார். ஒருநாள் எனக்குத் தேவையான பழவகைகளை வாங்கி வந்து “குஞ்சையாவுக்கு கொள்ளி வைப்பியா மனா?”, என்று கேட்டார். நானும் “ஓம்” என்றேன். அவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அதன் பிறகு எனது தேவைகளை நிறைவேற்றுமிடத்தை நான் தெரிந்து கொண்டேன். ஒவ்வொரு தடவையும் அவர் என்னைக் கேட்பார் “குஞ்சையாவுக்கு என்ன செய்வாய்?”, “கொள்ளி வைப்பன்”, இதன் தாக்கம் விளங்காது பதில் சொல்லும் வயது.

ஏழாவதாகச் செந்தில்குமரன் பிறந்தான். அவன் மீது பாசமாகக் கொட்டி வளர்த்தார்கள். நானும் வளர்ந்து விட்டேன். அப்போதெல்லாம் இந்தப் பழைய சம்பவத்தை எனது குடும்பத்தாரிடம் சொல்லிச் சிரிப்பேன். “இப்ப குஞ்சையா செத்து நான் கொள்ளி வைக்கப் போனால் குஞ்சையா பெட்டிக்குள்ளால எழும்பி “ஏன் நீ கொள்ளி வைக்கிறாய் செந்தில் எங்கை போட்டான்” எண்டு கேட்பார் என்று சொல்லிச் சிரிப்பேன்.

அவன் இயக்கத்துக்குப் போய் மாவீர் ஆனதும் நான் அங்கே போனேன். அப்போது அவர், “டேய் நீ சின்னனாய் இருக்கேக்கை குஞ்சையாவுக்கு கொள்ளி வைப்பனெண்டெல்லோ சொன்னனீ... வைப்பாய்தானே...” என்றார்.

புரியாத வயதில் சொன்ன அந்த வார்த்தைகளில் இத்தனை அர்த்தமா...? இத்தனை தாக்கமா...? தொடர்ந்து பாடல் ஒலிக்கிறது.

“.... அன்று செங்களம் மீதிலே
உங்களோடாடிய தோழர்கள்
வந்துள்ளோம்...”

அடிபட்ட பந்தாக மீண்டும் சீலனை நோக்கி நினைவுகள்... சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதல். மேல் மாடியில் காலில் காயப்பட்ட சீலன் காலை இழுத்துக் கொண்டு இயலாத நிலையில் றிப்பிட்டரைக் கொடுத்து விட்டு அந்த பொலிஸ் நிலைய வளவில் தேங்கியிருந்த மழைத்தண்ணீரைக் குடிக்கிறான். தொடர்ந்து படுத்தபடியே அவனது உத்தரவுகள், “ஒண்டையும் விடக்கூடாது எல்லாத்தையும் ஏத்தவேணும்”, இயந்திரமாக இயங்குகிறோம். எல்லாவற்றையும் ஏற்றியதும் மினிபஸ் புறப்படுகிறது. அழுதபடியே ரஞ்சன் காயப்பட்ட எல்லாரையும் கொஞ்சுகிறான். (சீலன், புலேந்திரன்....) எல்லாரையும் காப்பாற்ற விரைவாக வாகனத்தை செலுத்துகிறான் சங்கர். அன்று மற்றவர்கள் காயப்பட்டதற்காக அழுத ரஞ்சன் உட்பட ஏனைய அனைவரையும் தொலைத்து விட்டு நிற்கிறோம். அதே வரிகள் மீண்டும்.

“.... அன்று செங்களம் மீதிலே
உங்களோடாடிய தோழர்கள்
வந்துள்ளோம்...”

வரிசையாக நினைவுக்கு வருகின்றனர். “யாழ்ப்பாணத்துக்கு வெளியில அடிக்க வேணும்”, என்று அடிக்கடி கூறும் செல்லக்கிளியம்மான்.

உமையாள்புரத்தில் இராணுவத்தினர் ஓடும்போது சிரித்தபடியே “துரத்துங்கடா” என்றபடியே அவர்களின் ட்றக்கில் ஏறிய செல்லக்கிளியம்மான்... களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலில், “அம்மாட்டச் சொல்லுங்கோ நான் சண்டையிலதான் செத்தனெண்டு”, என்று சொன்ன பரமதேவா. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடுமையாகச் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது, “ரெண்டு கிறனைட் தாங்கோ நான் உள்ளுக்கை போய்க் காட்டுறன்” என்று சொன்ன விசாகன். “அண்ணே ஒரு சக்கைக் கானைத் தாங்கோ நான் கொழுத்திக் கொண்டு போய் உள்ளுக்கை வைச்சிட்டு வாறன்” என்று சக்கைக்கானை வாங்கிக் கொண்டு துப்பாக்கி வேட்டுகளுக்கிடையே பொலிஸாருக்கு மத்தியில் அதை வைத்து விட்டு வந்த கமல்... இன்னும் எத்தனை... எத்தனை...

“எங்கே! எங்கே! ஒருதரம்
விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே
மறுபடி உறங்குங்கள்”

தவிக்கும் மனதின் வார்த்தைப் பிளம்பு இது. எனக்கு இதற்கும் மேல்... “ழ”கரம், “ல”கரம் வித்தியாசமில்லாமல் மழலையாக ஒலிக்கும் சீலனின் வார்த்தைகளைக் கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

“நள்ளிரா வேளையில்
நெய்விளக்கேற்றியே நாமுமை
வணங்குகின்றோம்”

பசீனுக்கு எப்போதும் சந்தேகம் இந்த சயனைற் வேலை செய்யுமாவென்று, அடிக்கடி கேட்பான். “அண்ணை இது வேலை செய்யுமோ?”

“அது வேலை செய்யும் நீ போடா”, வல்வெட்டித்துறைக்கு அனுப்பி வைப்போம். நாம் எத்தனை தரம் சொன்னாலும் அவனுக்குத் திருப்தியில்லை.

ஒருநாள் நள்ளிரவு. களைத்துப்போய் வந்த நான் படுக்கப்போகிறேன்.. அப்போதும் கேட்கிறான். “அண்ணை இது வேலை செய்யுமோ?” – எனக்கு எரிச்சல். “வேலை செய்யாது போல கிடக்கு... உன்னிலதான் ரெஸ்ற் பண்ண வேணும்... போய்ப் படடா”

அவன்தான் எமது இயக்கத்தில் முதன் முதல் சயனைற் உட்கொண்டவன். அந்தச் செய்தி கிடைத்ததும் நான்... இந்த வாயால இனி எதுவும்...

“எங்கே! எங்கே! ஒருதரம்
விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே
மறுபடி உறங்குங்கள்”

கண்ணால் காண முடியவில்லைத்தான். ஆனால், மனதில் அனைவரது முகங்களும்... அங்கிருந்து நகர்கிறேன்.

“உயிர்விடும் வேளையில்
உங்களின்
வாயது உரைத்தது தமிழீழம் –
அதை
நிரை நிரையாக நின்றினி
விரைவினில் நிச்சயம்
எடுத்தாள்வோம்.”

என்ற வரிகளை மனதில் சுமந்தபடி அங்கிருந்து நகர்கிறேன். கடந்த வருடத்தைப் போலவே. அங்கு பலர் மயங்கி விழுகின்றார்கள். முதலுதவிப் படையினர் அழைக்கப்படுகின்றனர்.

அறிவிப்பாளரின் மொழியில் கூட சோகம்...

உலகத்தில் எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும் இப்படியொரு காட்சியைக் காண முடியாது என்று என் மனது சத்தியம் செய்கிறது.

மருத்துவம்

# நீர் வறட்சியும் நினைவிழப்பும்!

உடலில் நீர்ச்சத்து குறைந்து, உடல் வறட்சியாவதை ஹடீஹைட்ரேஷன்' என்பார்கள். இது வயதானவர்களை எளிதில் பாதிக்கும். இதற்கு உடனடி சிகிச்சை தேவை. இல்லையென்றால், பாதிக்கப்பட்டவர் அடுத்த சில மணி நேரத்தில் சுயநினைவை இழக்க நேரிடும். முதியவர்கள் டீஹைட்ரேஷன் பாதிப்பிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்கான எளிய வழிமுறைகள்

1. வெயில் உச்சத்திலிருக்கும் நேரத்தில் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

2. நீர்ச்சத்தைப் பெற தண்ணீர் குடிப்பது மட்டும் போதாது. நீர்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்கள் மற்றும் அவற்றின் சாறுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

3. அன்றாட உணவை ஐந்து வேளைகளாகப் பிரித்துச் சாப்பிடலாம்.

4. நீரிழிவு நோய், இரத்த அழுத்தம், புராஸ்டேட் கோளாறு இருப்பவர்களுக்கு உடலில் நீர்ச்சத்து குறைவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, இந்தப் பிரச்னைகள் உள்ளவர்கள் எந்தச் சூழலிலும் மருந்து, மாத்திரைகளைத் தவிர்க்கக் கூடாது.

5. அதிக வியர்வை வெளியேறும் எந்த வேலையையும் செய்ய வேண்டாம்.





# நோய்களை எதிர்க்கும் நார்த்தங்காய் இலை!

ஆயுர்வேத மருத்துவ முறையில் அதிகம் பயன்படுத்தப்படும் முக்கியமான காய் வகை, எலுமிச்சைக் குடும்பத்தைச் சேர்ந்த நார்த்தங்காய். காய் மட்டுமல்ல, இதன் இலைகூட மருத்துவ சக்தி வாய்ந்தது. எலுமிச்சை வகையைச் சேர்ந்தது என்பதால், இதில் சிட்ரிக் அமிலம் அதிகமிருக்கும். அதனால், விற்றமின் சி சத்து நிறைந்து காணப்படும்.

நார்த்தை இலையை காய வைத்துப் பொடியாக்கிப் பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகளைப் பார்ப்போம்.

உடல் சூடு அதிகரிப்பதால் ஏற்படும் பித்தம், வாதம் போன்ற பிரச்னைகள் குணமாகும்.

சமிபாட்டுப் பிரச்னைகள் ஏற்படாது.

வயிறு தொடர்பான அனைத்துப் பிரச்னைகளுக்கும் இந்தப் பொடி சிறந்த மருந்து.

குடல் பிரச்னைகள் சரியாகும்.

இரும்புச்சத்து, சோடியம், கல்சியம், பீட்டா கரோட்டீன், மக்னீசியம், அயோடின், நார்ச்சத்து கள் நிறைந்தது என்பதால் ஊட்டச்சத்து குறைபாடுள்ள வர்களுக்கான மிகச்சிறந்த மருந்து இது.

நார்த்தையிலுள்ள செலினியம் சத்து, மூளையின் செயல்பாடுகளைத் தூண்டிவிடும். எனவே, சுறுசுறுப்பாகவும் புத்துணர்வுடனும் செயல்பட முடியும்.

மிகச்சிறந்த நோயெதிர்ப்பு சக்தியாக செயற்படும். எனவே, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

இந்தப் பொடியை தினமும் சாப்பிட்டால் வாந்தி உணர்வு கட்டுப்படும் என்பதால் கர்ப்பவதிகள் தாராளமாகச் சாப்பிடலாம்.

அஜீரணத்தால் ஏற்படும் நெஞ்செரிச்சல் பிரச்னைகளைத் தவிர்க்கலாம்.

புற்றுநோய்க்கான சாத்தியக்கூறுகள் குறையும்.

இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள்வைத்திருக்க உதவும்.

சிறந்த வலி நிவாரணியாக நார்த்தை இருக்கும். உடலின் உள்ளுறுப்புகளில் ஏற்படும் பிரச்னைகளுக்கும்கூட நார்த்தை தீர்வளிக்கும்.

எலும்பு சார்ந்த பிரச்னைகள் தடுக்கப்படும். குறிப்பாக, மூட்டுவலியை முழுமையாகத் தவிர்க்கலாம்.

# 20 இலும் வரும் மாரடைப்பு?



இன்றைய சூழலில் உலகம் உள்ளங்கைக்குள் வந்துவிட்டது. ஒரு ஸ்மார்ட்போன் இருந்தாலே போதும். உலகின் எந்த மூலையிலிருக்கும் எந்தவொரு பொருளையும் வாங்கிவிட முடியும். விரும்பிய பொருளை மட்டுமல்ல, உணவையும்கூட இருக்கும் இடத்துக்கே வரவழைத்துவிட முடியும். உலகம் சுருங்கிவிட்டது. உண்மைதான், நவீன யுகம் டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் பல படிகள் முன்னேறிவிட்டது.

பல வேலைகளை உட்கார்ந்த இடத்திலேயே முடித்துக்கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் கைபேசியை நாடுகிறோம். விளைவு, நடைப்பயிற்சி குறைந்துவிட்டது. பக்கத்துத் தெருவில் உள்ளவரைக்கூட நடந்து சென்று பார்த்து, பேசும் வழக்கத்தைக் குறைத்துவிட்டோம். உணர்வுகள் எதுவாயினும் அதை சமூகவலைத்தளங்களில் பகிர்ந்துகொண்டு, ஒதுங்கி நிற்கிறோம். விளைவு, உடற்பருமன், அதீத உணர்வுகள், மனவெழுச்சி போன்றவற்றுக்குள் சிக்கிக்கொள்கிறோம்.

முன்னோர்கள் வகுத்துக்கொடுத்த வாழ்க்கை முறையைத் தொலைத்துவிட்டோம். இதனால் பல நோய்கள் தாக்கும் அபாயத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளோம். அவற்றில் ஒன்று, மாரடைப்பு!

'ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படுவதுக்குப் பல காரணங்கள் உண்டு' என்கிறார்கள் இதயநோய் நிபுணர்கள்.

**மாரடைப்புக்கான அறிகுறிகள் என்னென்ன?**

"மாரடைப்புக்கான சாத்தியங்கள் 100% உள்ள ஒருவருக்கு இந்த அறிகுறிகள் தென்படலாம்: நடக்கும்போதும், படிக்கட்டுகளில் நடக்கும்போதும், சிலருக்கு உணர்ச்சிவசப்பட்டுப் பேசும்போதும் வலி ஏற்படும். இதுமட்டுமன்றி அதிகமான உணவு உட்கொண்ட பின்னர் நடக்கும்போதும்கூட வலி ஏற்படும். இது 'அஞ்சைனா (Angina)' எனப்படும். இந்த அஞ்சைனா அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

அவர் பரிசோதனை மேற்கொண்ட பின்னர், சம்பந்தப்பட்டவருக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பைக் கண்டறிந்து, இரத்தக்குழாயில் ஏற்பட்டுள்ள அடைப்பைக் கண்டறிந்து, அதற்கேற்ற மாத்திரைகளைப் பரிந்துரைப்பார். அதை உட்கொள்ளும்போது மாரடைப்பிலிருந்து நிவாரணம் பெற முடியும்.

சிலருக்கு திடீர் மாரடைப்பு வரலாம். இவர்களுக்கு வலி ஏற்படுவதே தெரியாது. இவர்கள் தோள்பட்டையில் வலியை உணரலாம். வாயுத் தொந்தரவு, மூச்சுத்திணறல், படபடப்பு மற்றும் சட்டென்று வியர்ப்பது போன்றவை தென்பட்டால் அது மாரடைப்புக்கான அறிகுறிகளாக இருக்கலாம். அவர்கள் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும்.

உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய்கள்... நொறுக்குத்தீனி பிரியர்களுக்கும் மாரடைப்பு வருவதற்கான சாத்தியம் அதிகம்.

**நெஞ்சுவலிக்கு நாக்குக்கு அடியில் மாத்திரை வைப்பது ஏன்?**

அஞ்சைனா அறிகுறிகள் ஏற்பட்டால் அல்லது முதல் அட்டாக் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு நெஞ்சு வலி வரும்போது நாக்குக்கு அடியில் வைக்கும் மாத்திரைதான் 'நைட்ரேட்' (Nitrate tablets). அது ஐந்து மில்லி கிராம் இருக்கும். நாக்குக்குக் கீழே வைத்தவுடன் அரை நிமிடத்தில் கரைந்துவிடும். உடனே இரத்தத்தில் சென்று கலந்துவிடும் என்பதால்தான் நாக்குக்கு அடியில் இந்த மாத்திரை வைக்கப்படுகின்றது.

இந்த மாத்திரையானது இதய இரத்தக்குழாய்களை விரிவடையச் செய்து, இதயத் தசைகளுக்கு இரத்தவோட்டத்தை அதிகரிக்கும். இதனால் வலி குறையும். பிற மருந்துகள் எல்லாம் வயிற்றுக்குப்போய் ஜீரணமாகி பின்னரே இரத்தத்தில் கலக்கும். நரம்பில் போடப்படும் ஊசியான 'இன்ட்ராவைனஸ் (Intravenous)'க்கு இணையாது இந்த நைட்ரேட் மாத்திரை.

**எந்த வயதில் பரிசோதனை மேற்கொள்ளலாம்?**

கடந்த 51 வருடங்களாக இதயநோய் நிபுணராகப் பணியாற்றி வருகிறேன். நான் மருத்துவத் துறையில் நுழைந்து பணியாற்றும்போது 70, 80 வயதுக்காரர்களுக்குத்தான் மாரடைப்பு வந்தது. அது 60 ஆகக் குறைந்து, 40 ஆகக் குறைந்து தற்போது 20 - 25 வயதுள்ள ஆண், பெண்களுக்கே மாரடைப்பு ஏற்படுகிறது.

இது மருத்துவ ரீதியாகக் கண்டறியப்பட்டுள்ள உண்மை. 20 வயதைக் கடந்துவிட்டாலே பரிசோதனை செய்துகொள்வது நல்லது. ஒவ்வொரு ஐந்து வருட இடைவெளியில் பிளட் சுகர், கொலஸ்ட்ரோல், எக்ஸ்ரே, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகளைச் செய்ய வேண்டும்.

# பழமொழியும் புதுமொழியும்

**யானைக்கு ஒரு காலம் வந்தால்**
**பூனைக்கு ஒரு காலம் வரும் என்பது தவறு.**




ஆ + நெய்க்கு ஒரு காலம் வந்தால்
பூ + நெய்க்கு ஒரு காலம் வரும் என்பதே சரி.

இங்கு... ஆ நெய் = பசுவின் நெய் பூ நெய் = தேன்.

அதாவது பசுவின் நெய்யை அதிகமாக உட்கொண்டு உடல் கொழுத்தால் , பூவின் நெய்யான தேனை மருந்தாக உட்கொள்ள வேண்டிய காலம் வந்தே தீரும் – என்பது இதன் பொருள்.

# பூஞ்சிட்டுக்கள்



ராஜேஸ்மணாளன்

## தவளையாரே தவளையாரே



தவளையாரே தவளையாரே
தத்திச்செல்லும் தவளையாரே
உண்டுகளிக்கும் உணவெதுவோ..
உண்மை எனக்கு உரைப்பீரோ

நோய்பரப்பும் ஈயும் கொசுவும்
நொடியில் தின்பேன் நானும்
அந்துப்பூச்சியும் வெட்டுக்கிளியும்
ஆசையாய்த் தின்பேன் மேலும்..

தவளையாரே தவளையாரே
தத்திச்செல்லும் தவளையாரே
வாலோடு தானே பிறந்தீரே
வளர்ந்ததும் ஏனோ இழந்தீரே..

நீரில் மட்டும் வாழும் காலம்
நீந்திப்போக வால்தான் உதவும்
வளர்ந்து மண்ணில் வாழும் காலம்
மறைந்துபோனதே எந்தன் வாலும்

## கர்வம்



அடர்ந்த காட்டுப்பகுதியில் குதிரை புல் மேய்ந்து கொண்டிருந்தது. அங்குள்ள பொந்து ஒன்றில் வசித்த எலியைக் கண்டதும், இரண்டும் பேசிப் பழகின. சிறந்த நண்பர்கள் ஆனார்கள்.இருந்தாலும் எலி தற்பெருமை அடித்துக் கொள்ளும்.

நான் மிகவும் வலிமையானவன். மண்ணையே துளைத்து வளை அமைத்துவிடுவேன்.

என்னை யாராலும் ஒன்றும் செய்யமுடியாது. பாம்பைக்கூட விரட்டியடித்து விடுவேன்.' என்று வீண் பெருமை பேசும். ஒருநாள் எலியும், குதிரையும் கொஞ்சம் தூரத்தில் சென்று மேய்ந்து வர முடிவு செய்தன. இரண்டும் பேசிக்கொண்டு நடந்தன.

அப்போது, 'நான்தான் உன்னை வழி நடத்தி செல்வேன். நான் சண்டையில் அவனை வீழ்த்தியிருக்கிறேன், இவனை வீழ்த்தியிருக்கிறேன்' என்று தம்பட்டம் அடித்துக் கொண்டே முன் சென்றது எலி. திடீரென்று எலி நின்றது.'ஏன் நின்றுவிட்டாய்? தொடர்ந்து செல்' என்றது குதிரை. 'உனக்கு கண் சரியாக தெரியாதா? எதிரே பார் ஆறு ஓடுகிறது, எப்படி கடப்பது?' என்று கேட்டது எலி.

'அது ஆறா? சிறிய கால்வாய் தானே இது. எளிதாக கடந்துவிடலாம்' என்றது குதிரை.

'குதிரையே இது கால்வாயா? எனக்கு ஆறுபோல்தான் தெரிகிறது, இறங்கினால் நிச்சயம் தண்ணீர் அடித்துச் சென்றுவிடும், நாம் இரண்டு பேரும் மூழ்கிவிடுவோம்' என்றது எலி.

குதிரை எலியின் பேச்சை கண்டுகொள் ளாமல் கால்வாயில் இறங்கியது, 'ஏய் எலியே, என் முழங்கால் அளவு கூட வெள்ளம் இல்லை. இதையை நீ ஆறு என்கிறாய், உடனே இறங்கிவா?' என்றது குதிரை.


'நண்பா உணக்கு வேண்டுமானால், இது குறைந்த தண்ணீராக இருக்கலாம். ஆனால் என் உருவத்திற்கு இது நதிபோல வெள்ளப்பெருக்கு தான். தயவு செய்து என்னை உன் முதுகில் ஏற்றி அக்கரையில் விடு. நான் என்னைப் பற்றி கர்வத்துடன் பேசியதை மறந்துவிடு' என்று மன்னிப்புக் கேட்டு அடங்கியது எலி.'அப்படி வா, வழிக்கு. இனியும் வீண் பெருமை பேசி வாழாதே' என்று எலியை, தன் மதுகில் ஏற்றி அக்கரையில் விட்டது குதிரை. இரண்டும் கர்வமின்றி நண்பர்களாக வாழ்ந்தன.



## விந்தைச் செய்திகள்
## நீர்யானை

இதை ஆங்கிலத்தில் Hippopotamus என்று அழைக்கிறார்கள். இது ஆங்கிலச் சொல் அல்ல. கிரேக்க மொழிச் சொல்லான இதன் பொருள் நீர்க் குதிரை என்பதே. ஆபிரிக்காவின் மிக ஆபத்தான வனவிலங்குகளில் இதுவும் ஒன்று. உடலைக் குளிர்மையாக வைத்திருக்க , பகல்பொழுதை இவை நீருக்குள்ளேயே சுமாராக 16 மணி நேரத்தை கழிக்கும். மாலை வேளைகளில் வெளியே மேய்ச்சலுக்கு வரும். பீப்பாய் போன்ற உடலைக் கண்ட இந்த மிருகத்தின் வாய் மிக அகலமானது. மிக வேகமாக ஓடக்கூடியவை என்றாலும் அது ஒரு சொற்ப தூரத்திற்கே சாத்தியப்படும். இவந்த மிருகங்களுக்கு இரத்தமாக வியர்க்கும் என்று சொல்வதுண்டு நிஜத்தில் தோலை ஈரப்படுத்தி, கிருமிகளிலிருந்து பாதுகாக்க இந்தச் சிகப்பு நிறமான திரவம் சுரக்கிறது.

# அறிவோம் உயர்வோம்
## அட்லாண்டிக்



வட, தென் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க கண்டங்களை எல்லைகளாகக் கொண்டது அட்லாண்டிக் சமுததிரம். உலகின் இரண்டாவது பெருஞ் சமுத்திரம் இதுவாகும். பூமிப் பரப்பில் ஐந்தில் ஒரு பகுதியில் இது அமைந்துள்ளது. வடக்கு அட்லாண்டிக் கடற் பகுதியில் நீண்ட மலைத் தொடரைக் காணலாம். உலகின் 2.9சதவீதம் தண்ணீர் இங்குதான் உற்றது. தென் அட்லாண்டிக்கில் பெரிய அலைகளும் கடற்காற்றும் எப்பொழுதும் இருக்கும். “டைட்டானிக்” கப்பல்1912இல் பனிப்பாறையில் மோதி மூழ்கியது இங்குதான்.

# என் கேள்விக்கென்ன பதில்? (4)

**( சென்ற வாரப் பதில்கள் )**

1) முகாரி 2) சவுதி அரேபியா 3) மீத்தேன் 4) 8 ஆயிரம் லீ. 5) பன்றி

**இந்த வாரக் கேள்விகள்**


1. மாம்பழத்தின் பிறப்பிடம் எது ?
2. ஜப்பானியரின் தேசிய உடையின் பெயர் என்ன ?
3. தங்கப்போர்வை நிலம் எது ?
4. தென் ஆப்பிரிக்காவுக்கு எத்தனை தலைநகர்கள் உண்டு ?
5. கிரிக்கெட் மட்டை எந்த மரத்தால் தயாரிக்கப்படுகிறது ?

(பதில்கள் அடுத்த வாரம்)

**(ஐந்து கேள்விகளுக்கும் சரியான பதில்களை அனுப்புபவர்களின் புகைப்படம், பெயர், விவரங்கள் அடுத்த வாரம் பதில்களுடன் பிரசுரிக்கப் படும். அனுப்ப வேண்டிய முகவரி :**

**707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**eelanaduweekly@gmail.com**





# தமிழர் தாயகத்தின் ம





முல்லைத்தீவு - அளம்பில்

மு






மன்னார் - ஆட்காட்டிவெளி

வவுனியா - ஈச்சங்குளம்





கிளிநொச்சி - கனகபுரம்


யாழ்ப்பாணம் - கொடிகா






யாழ்ப்பாணம் - கோப்பாய்

மட்டக்


மன்னார் - பண்டிவிரிச்சான்

# ாவீரர் நாள் பதிவுகள்




ல்லைத்தீவு - ஆலங்குளம்



யாழ்ப்பாணம் - சாட்டி



மன்னார் - இரணைப்பாலை



யாழ்.பல்கலைக்கழகம்



மட்டக்களப்பு - வாகரை



மம்




முல்லைத்தீவு - வன்னிவிளாங்குளம்



யாழ்ப்பாணம் - நல்லூர்




க்களப்பு - மாவடி முன்மாரி





கிளிநொச்சி - முழங்காவில்




முல்லைத்தீவு - தேராவில்



யாழ்ப்பாணம் - தீருவில்



மட்டக்களப்பு - தரவை

உருளும் உலகில்...

ஏ.ஜே.ஞானேந்திரன்



# கை, காலை கட்டி ஒரு பயணம்

முறையான விசா இல்லையா? ஜாக்கிரதை. அமெரிக்கா பொறுமை யின் எல்லையைத் தாண்டிவிட்டது போல் தெரிகின்றது. ஒருவரல்ல இருவரல்ல 145 பேரின் கை, கால்களை கட்டி, விமானத்தில் ஏற்றி, இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியிருக்கிறது அமெரிக்கா. அதிலும் விமானத்தில் இவர்களை வந்த இடதிற்கே போய்ச் சேருங்கள் என்று சொல்லி, உரிய ஆவணங்கள் இல்லாத 145 இந்தியர்களையே புதுடில்லிக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

இதில் 142 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள். இவர்களில் பெரும்பாலானோர் 20 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட, இவர்கள் அனைவரும் ஒரே விமானத்தில் டில்லி விமானநிலையம் வந்து சேர்ந்திருக்கிறார்கள். இந்த இளவயதினரின் வெளிநாட்டுக் கனவுகள் சிதைந்திருக்கின்றன. சர்வதேச முகவர்களிடம் தலா 25 இலட்சம் ரூபா வரை கொடுத்து ஏமாந்துள்ளார்கள் இவர்கள்.

இந்த, 145 இந்தியர்களுடன் இலங்கை, பங்களாதேஷ் நாட்டை சேர்ந்தவர்களும் சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்பது உபரிச் செய்தி.

# இருக்கு...! ஆனால் இல்லை...!

அடடா இந்த டிஜிற்றல் உலகில் என்னென்ன அநியாயங்கள் எல்லாம் அரங்கேறுகின்றன? இல்லாத ஒன்றுக்காக விலை பேசும் அநியாத்தை எங்காவது கேட்டிருக்கிறீர்களா? இந்த வருட ஆரம்பித்திலேயே அறிமுகமாகி விட்டது என்கிறார்கள். ஒரு ஆடையை வடிவமைத்து(வடிவமைத்தவர் சென் பிரான்ஸ்சிஸ்கோ நகர வர்த்தக பிரமுகரான றிச்சார்ட் மா என்பவர்) அதை 10,000 டொலருக்கு விற்றிருந்தார். ஒரு டிஜிற்றல் ஆடையை சமூக வலைத்தளங்களில் உலாவ விடும்போது அதைப் பணம் கொடுத்து வாங்கிய ஒருவரால் மட்டும் அணிய முடியும். இந்தப் “போலி நிஜமே” எல்லோராலும் எதிர்பார்க்கப்படுவது! ஆடையை வடிமைத்த பின்பு, அதை



வாங்க ஒரு விலை. பின்பு இதே ஆடையை நீங்கள் “அணிய” விரும்பினால் இன்னொரு விலை. நீங்கள் அணிவதை இன்னொருவர் அணிய மாட்டார் என்பது இந்த டிஜிற்றல் ஆடையின் தனித்துவம். மிக விரைவில் பல இளம் பெண்களின் செல்லப் பிள்ளையாக மாறப்போகிறது இந்த டிஜிற்றல் உடை!



# தங்க மகன் வந்தார்

இனிவரும் காலங்களில் வற்றிக் கொண்டிருக்கும் எண்ணெய் வளத்தை நம்பியிருக்க முடியாது என்று முடிவெடுத்து, வளைகுடா நாடுகள், தம் பணத்தை பல்வேறு திட்டங்களில் முதலிட ஆரம்பித்து விட்டன. புதியதொரு திட்டமாக சவுதி அரேபியா, தங்கக் கடன் அட்டைகளை அறிமுகம் செய்திருக்கின்றது. 215, 000 டொலர் தொகையை (800,000 றியால்), இந்தப் பாலைவன ராஜஸ்தானத்தில் முதலிடத் தயாராக உள்ளவர்களுக்கு, 5 வருடமோ அல்லது 10 வருடங்குக்கோ நாட்டிற்கான நுழைவு அனுமதி (விசா) வழங்கப்படும் என்று சவுதி அரசு அறிவித்துள்ளது. இவர்கள் தமது குடும்ப அங்கத்தினரையும் நாட்டிற்குள் வரவழைக்க முடியும். இவர்களால் நாட்டில் “காணி பூமி”யும் வாங்க முடியும். வயது 21ஐ தாண்டியிருக்க வேண்டும் , மருத்துவப் பிரச்னைகள், குற்றங்கள் இழைத்தல் இருக்கக் கூடாது என்பதுதான் நிபந்தனை. இப்படியானவர்களுக்கு அளிக்கப்படும் விசாவை “தங்க விசா” என்று அழைக்கிறது சவுதி அரசு.



# போத்தல்களால் ஒரு வீடு


பிரேசிலில் பெண் ஒருவர் 6 ஆயிரம் கண்ணாடிப் போத்தல்களைக் கொண்டு படுக்கையறை, சமையலறை, கழிவறையுடன் கூடிய அழகான வீடு ஒன்றைக் கட்டி முடித்துள்ளார். செங்கல்லையோ அல்லது சிமெந்துக் கற்களையோ அவர் பயன்படுத்தவே இல்லை.

கணவனும் இவரை விட்டு விட்டுப் போய்விட்டார். ஒரு கைக்குழந்தையோடு வாழும் இவோன் மார்டின் (ஐஎழநெ ஆயசவனைெ) என்ற இந்தப் பெண் , தொழிலால் ஒரு விவசாயி. பிரேசிலின் சா பாலோ மாகாணம்தான் இவர் பிறந்த இடம். உடல்நலக் குறைவாக உள்ள பிள்ளைக்கு பாதுகாப்பாக ஒரு சிறு வீடு வேண்டுமே என்ற மனவிரக்தியில் எழுப்பப்பட்டதுதான் இந்தப் போத்தல வீடு. மொத்தம் 6 ஆயிரம் கண்ணாடிப் போத்தல்களைக் கொண்டு 3 மீற்றர் உயரம், 9 மீற்றர் அகலம் மற்றும் 8 மீற்றர் நீளம் கொண்ட அழகான வீட்டை கட்டி முடித்துள்ளார் இவர்.

வீட்டினுள் படுக்கையறை, சமையலறை, கழிவறை என அனைத்துமே கண்ணாடிப் போத்தல்களாலேயே பிரிக்கப்பட்டுக் கட்டப்பட்டு உள்ளன.

அசாத்திய துணிவும், அவசரத் தேவையும் கைகோர்க்கும்போது எதையும் சாதிக்கலாமோ?

# நீச்சல் உடையும் இலவசமும்



தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள் பெற்றோல் நிலைய உரிமையாளர்கள். ரஷ்யாவின் மத்திய பகுதியின் சமாரா நகரில் பெற்றோல் நிலையம் ஒன்று உள்ளது. இந்த பெற்றோல் நிலையத்தை மக்களிடம் பிரபலப்படுத்த அதன் உரிமையாளர் வினோத சலுகை ஒன்றை அறிவித்து விளம்பரப்படுத்தினார். அதன்படி பெற்றோல் நிலையம் திறந்த பிறகு முதல் 3 மணி நேரத்துக்குள் நீச்சல் உடையில் வரும் அனைவருக்கும் இலவசமாக பெற்றோல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இது அவர்களது அறிவித்தல்!

கவர்ச்சியான நீச்சல் உடையில் பெண்கள் வர, தமது நிலையம் பிரபலமாகிவிடும் என்பது இவர்களது கணிப்பு. ஆனால், நடந்ததோ வேறு. இலவச பெற்றோல் குறித்த விளம்பரம் வெளியானதும் ஏராளமான ஆண்கள் நீச்சல் உடையை அணிந்து கொண்டு பெற்றோல் நிலையத்துக்கு வந்தனர். நீச்சல் உடையில் வரவேண்டும் என்பதுதானே கோரிக்கை? அது ஆணா அல்லது பெண்ணா என்பதைக் குறிப்பிடாததால் வந்த வினை இது என்று தலையில் அடித்துக் கொள்கிறார் பெற்றோல் நிலையச் சொந்தக்காரர்.

காணுயிர் வாழ்வு

ராஜேஷ்

# இது பெண்ணுக்கான போர்...!
# கெத்துக் காட்டும் கெலாடா குரங்குகள்



உலகிலிலுள்ள ஒவ்வொரு இனக் கூட்டத்துக்கும் தலைவன் நியமிக்கப்படுகிறான், அல்லது தன்னையே நியமித்துக் கொள்கிறான். அதற்காக நேரம் பார்த்து காய் நகர்த்துவதிலிருந்து, வஞ்சகம் செய்வது வரை எல்லாமே தனி ரகமாக இருக்கும். தலைவன் என்ற பதவியை நோக்கிய பயணத்தில் பல போராட்டங்கள் இருக்கும். ஒரு கூட்டத்தின் தலைவனாக வரும் வரை பிரச்னைதான். அந்தத் தலைவன் பதவியைத் தக்கவைப்பதில் மனிதனென்ன, குரங்கென்ன எல்லாமே ஒன்றுதான். ஒவ்வொன்றும் ஒரு வகை அதில் கெலாடா குரங்கு தனி வகை.

குரங்குகள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். கெலாடா குரங்கு குறித்து எங்கேனும் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பார்ப்பதற்குப் பபூன் வகை குரங்கு போல இருக்கும். உண்மையில் அவை பபூன் குரங்குகள் அல்ல. இவை எத்தியோப்பிய மலைக் காடுகளில் வாழும் உயிரினம். கடல் மட்டத்திலிருந்து 1,800 மீற்றரிலிருந்து 4,400 மீற்றர் கொண்ட சிகரம்தான் இவற்றின் வாழிடம்.

கெலாடா குரங்குகள் பெரிய பற்களைக் கொண்டவை. இந்த இனத்தில் ஆண் குரங்குகள், பெண் குரங்கைவிட ஒரு மடங்கு பெரியவையாக இருக்கும். ஆண், பெண் வித்தியாசத்தை எளிதில் கண்டறிந்துவிடலாம். இவை பல்வேறு குடும்பங்கள் இணைந்துகூட்டமாக வாழும் இயல்புடையவை. ஒரு கூட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட குரங்குகள் இருக்கும். மனிதனைத் தவிர்த்து எண்ணிக்கையில் அதிகமாக வாழும் ஒரே இனம் கெலாடா குரங்குகள் மட்டும்தான். ஆண்கள், கூட்டத்தோடு இருந்தாலும் பெண்களே கூட்டத்தை வழி நடத்தும். ஆண்கள் வருவதும் போவதுமாக இருக்கும். இவை கழுதைப் புலிகள் மற்றும் சிறுத்தைகளுக்கு பயந்து மலையின் சரிவான பாறைகளில் உறங்கும் பழக்கம் கொண்டவை. இவற்றின் சராசரி ஆயுள்காலம் 19 ஆண்டுகள்.

ஆண் கெலாடா குரங்குகளின் நெஞ்சுப் பகுதியில் முடிகள் இல்லாத ஒரு பகுதி இருக்கும். அதற்கு *BLEEDING HEART* என்று பெயர். அந்த இடம் குரங்கின் மனநிலையைப் பொறுத்து நிறம் மங்கலாகவோ, பொலிவாகவோ மாறும். அதன் உடலில் சுரக்கும் 'டெஸ்டாஸ்டிரோன்' என்ற ஓமோன் சுரப்பின் அளவைப் பொறுத்து அடர் சிவப்பு நிறமாக மாறும். இதுவே ஆண் குரங்கு, பெண் குரங்குகளுடன் இணை சேர்வதற்கான நேரமாகப் பார்க்கப்படுகிறது. அந்த நேரத்தில் பெண் குரங்குகள், தலைவனின் ஆணைக்கு இணங்கிவிட வேண்டும்.

அடர் சிவப்பு நிறம் தலைவனுடைய பலத்தையும் வீரியத்தையும் மற்ற குரங்குகளுக்கு தெரியப்படுத்துகிறது. மற்ற ஆண் குரங்குகள் தலைவன் இருக்கிற இடத்தை விட்டே ஓடி விடுகின்றன. கூட்டத்தில் இருக்கிற ஆண் குரங்குகள் தங்களின் எதிர்ப்பைக் காட்ட முயற்சி செய்தால் தலைவர் தன்னுடைய வேலையைக் காட்டிவிடுவார். தலைவனாக இருக்கும் ஆண் குரங்கு தன்னை ஆரோக்கியமானவனாகக் காட்டிக் கொள்ள அடிக்கடி பல்வேறு வேலைகளில் ஈடுபடும். பாறைகளின் உச்சிக்குச் சென்று சத்தமிடுவது, பெண் குரங்குகளிடம் இணை சேருவது, மற்ற ஆண் குரங்குகளை அடித்து ஓட விடுவது என எப்போதும் ஒரு கெத்தோடு சுற்றிக்கொண்டே இருக்கும். கூட்டத்தில் யார் எது செய்ய நினைத்தாலும் அதைத் தலைவனே முடிவு செய்பவனாக இருக்கிறான்.

பெண் குரங்குகள் தங்களுடைய குட்டியைப் பெரும்பாலும் இரவில் பெற்றெடுக்கின்றன. சராசரியாக, புதிதாகப் பிறந்த குட்டியின் எடை 464 கிராம் வரை இருக்கும். கூட்டத்தில் இருக்கிற மற்றப் பெண் குரங்குகள் குட்டியை எப்போது வேண்டுமானாலும் கடத்திக் கொண்டு போய் விடலாம் என்பதால் பிறந்த ஐந்து வாரங்கள் வரை தன்னுடனே வைத்து பெண் குரங்கு வளர்க்கும். குட்டிகள் ஐந்து மாதங்கள் கழித்தே தனியாகச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் ஆண் குரங்குகள் பருவமடைந்துவிடுகின்றன. பெண் இணை இல்லாமல் இருக்கும் ஆண் குட்டிகள் தனிக் குழுவாகச் சேர்ந்துகொள்கின்றன. பருவமடைந்த தனியன்கள் உடனடியாகப் பெண் குரங்குகளோடு இணை சேர்ந்துவிட முடியாது. அதற்காக அவை எட்டில் இருந்து பத்தாண்டுகள் வரை காத்திருக்க வேண்டும். அதற்குக் கூட்டத்தில் இருக்கிற தலைவன் தடையாக இருக்கிறான்.

தலைவன் பதவிக்கு எவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கிறோம் என்பது தலைவனுக்கு நன்கு தெரியும். தலைவனாக இருக்கும் குரங்கும் ஒரு காலத்தில் தனியனாக இருந்ததுதான். இதனால், தனியன்கள் தலைவனுக்கு எதிராக என்ன செய்வார்கள் என்பதைத் தலைவனாக இருக்கும் குரங்கு தெரிந்து வைத்திருக்கும். தனக்கு எதிராக எந்த ஓர் ஆண் குரங்கும் எழுந்துவிடக் கூடாது என்பதில் கவனமுடன் இருக்கும். தனியன் குரங்குகளுக்கு பயத்தைக் காட்டுவதற்காக நேரம் கிடைக்கும் போதெல்லாம் கையில் கிடைக்கும் ஆண் குரங்குகளை அடித்து வெளுப்பதை வழக்கமாக வைத்திருக்கும்.

அடக்கி வைத்திருக்கும் கோபமும் அழுகையும் ஒருநாள் வெடிக்கும, மனிதனோ, குரங்கோ இதுதான் உலக நியதி. ஆண்டுகள் செல்லச் செல்ல தலைவனாக இருக்கிற குரங்கு தன் பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பிக்கும். உள்ளே பயத்தை வைத்துக் கொண்டு "தான் பலமாக" இருப்பதாக காட்டிக் கொள்ள அவ்வப்போது பாறைகளின் உச்சியில் அமர்ந்து ஆர்ப்பரிக்கும். ஆனால், அதனால் எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை.

ஏனெனில் தலைவனாக இருக்கும் குரங்கிற்கு வெளிப்படையாக ஒரு பலவீனம் இருக்கிறது. அது, அதன் இயல்பான உடலமைப்பு. தலைவனின் நெஞ்சு பகுதியில் சுரக்கிற 'டெஸ்டாஸ்டிரோன்' ஓமோன் சுரப்பி குறையக் குறைய அதன் நெஞ்சு பகுதியின் அடர் சிவப்பு நிறம் குறைய ஆரம்பிக்கும். எவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தாலும் அடர் சிவப்பு நிறத்திற்கு மாறாமல் மங்கலாகவே இருக்கும். தலைவன் தன் பலத்தை இழக்கிறான் என்பது அந்த நிறத்தை வைத்தே மற்ற குரங்குகள் அடையாளம் கண்டு கொள்ளும்.

கூட்டத்தில் இருக்கிற தனியன் குரங்குகள், தலைவன் மீது கொடூர கோபத்துடன் இருக்க, இணை சேராமல் இருப்பது மட்டுமே காரணமாக இருக்கிறது. கெலாடா கூட்டத்தில் இருக்கும் ஆண் குரங்குகள் பெண்களுக்காக நடத்தும் சண்டைகளே அதிகம். பருவமடைந்த ஆண் தனியன் குரங்குகள் எப்படியாவது தலைவனை சாய்த்துவிட வேண்டுமென நேரம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும். தலைவனைச் சாய்ப்பது அவ்வளவு எளிதில்ல என்பது தனியன் குரங்குகளுக்கும் தெரியும். அதற்காக தனியன்கள் சில காலம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

தலைவனின் நெஞ்சு பகுதியில் சுரக்கிற 'டெஸ்டாஸ்டிரோன்' ஓமோன் சுரப்பி குறையக் குறைய அதன் அடர் சிவப்பு நிறம் குறைய ஆரம்பிக்கும். எவ்வளவு ஆக்ரோஷமாக இருந்தாலும் மங்கலாகவே இருக்கும். தலைவன் தன்னுடைய பலத்தை இழக்கிறான் என்பது அந்த நிறத்தை வைத்தே மற்ற குரங்குகள் அடையாளம் கண்டுகொள்கின்றன.

இப்போது தனியன் குரங்குகள் பருவ வயதில் இருப்பதால் அதனுடைய ஓமோன் சுரப்பி அதிகமாகச் சுரக்க ஆரம்பித்திருக்கும். இந்த நேரத்தில் இணை சேர கூட்டத்துக்கு வருகிற தலைவனை தனியன்கள் சுற்றி வளைத்து விடுகின்றன. தலைவனாக இருக்கும் ஆண் குரங்கு தனியன் குரங்குகளை எதிர்த்து நிற்கும், ஆனால் தனியன் குரங்குகள் கண்மூடித்தனமாகத் தாக்குதலைத் தலைவன் மீது தொடுக்கும். இந்தச் சண்டையைக் கூட்டத்தில் இருக்கும் எல்லா ஆண், பெண் குரங்குகளும் பார்த்துக் கொண்டிருக்கும். ஒரு கட்டத்தில் இதிலிருந்து தப்பித்தால் போதுமென்று தலைவன் அங்கிருந்து தப்பித்து ஓடிவிடும். தனியன் கூட்டத்தில் பலம் பொருந்திய ஆண் அடுத்த தலைமுறை தனியன்கள் வரும் வரை அதாவது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தலைவனாக இருக்கும்.

தென்னாபிரிக்காவின் *University of the Free State (UFS)* பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் கெலாடா குரங்குகளின் வாழ்வியலை ஆராய்ந்து அது குறித்து அறிக்கையைச் சமர்பித்திருக்கிறார்கள்.

தலைவனை ஏமாற்றி வேறோர் ஆண் குரங்கிடம் தொடர்பு வைத்திருக்கும் பெண் குரங்குகளும் கூட்டத்தில் இருக்கின்றன. இந்தச் செயலை தலைவன் கண்டுபிடித்துவிட்டால், கூட்டத்தில் வைத்துச் சம்பந்தப்பட்ட குரங்கைக் கண் மூடித்தனமாக தாக்கும். சில நேரங்களில் உயிரிழப்புக்கூட நிகழும். குரங்குகளுக்குள் ஏமாற்றுவது மற்றும் கண்டுபிடிப்பது பற்றிய பயம் இருப்பதற்கான சான்றுகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. விலங்குகள் உலகில் 'பயம்' மற்றும் 'கண்டுபிடிப்பு' குறித்துப் பதிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறை.

குரங்குகள் பலவிதம்... அதில் ஒவ்வொன்றும் ஒருவிதம்..!

# குருபெயர்ச்சி பலன்கள் 2019 - 2020

**குருப்பெயர்ச்சியால் ஒவ்வொரு ராசிக்கும் வெவ்வேறு விதமான பலன்கள் கிடைக்கும். 2019-2020 ஆம் ஆண்டில் ஏற்படும் பலன்கள்**



## துலாம்

எந்த ஊருக்குப் பிழைக்கச் சென்றாலும் நீங்கள் சொந்த ஊரை மறக்காதவர். தோல்வி என்பது வெற்றிக்கான ஏணிப்படிதான் என்பதை உணர்ந்த கடின உழைப்பாளி.

உங்களின் தனஸ்தானமான 2 ஆம் வீட்டில் அமர்ந்து பணப்புழக்கத்தையும், சமூகத்தில் அந்தஸ்தையும், வசதி, வாய்ப்புகளையும், குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தந்த குரு பகவான் 13.11.2020 வரை ராசிக்கு 3 ஆம் வீட்டில் அமர்வதால் எதையும் திட்டமிட்டு செய்யுங்கள்.

எந்த ஒரு வேலையையும் முதல் முயற்சியிலேயே முடிக்க முடியாமல் இரண்டு, மூன்று முறை போராடி முடிக்கவேண்டி வரும். இளைய சகோதரரின் வகையில் பிணக்குகள் வரும். வீண் வறட்டு கௌரவத்துக்காக சேமிப்பைக் கரைத்துக் கொண்டிருக்காதீர்கள். யாருக்காகவும் பிணைக் கையெழுத்திட வேண்டாம். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்ப வேண்டாம்.

கணவன், மனைவிக்குள் வீண்வாக்குவாதங்கள் செய்யவேண்டாம். அன்பும், அன்யோன்யமும் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி முக்கிய விஷயங்களை ஒப்படைக்காமல், நீங்களே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது. தங்க நகைகளைக் கவனமாகக் கையாளுங்கள்.

அக்கம்பக்கம் வீட்டாருடன் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளவேண்டாம். சிலர் உங்களை நேரில் பார்க்கும்போது நல்லவர்களாகவும், பார்க்காத போது உங்களைப் பற்றி வேறுமாதிரியாகவும் பேசுவார்கள். கவனமாகப் பழகுங்கள். உறவினர்கள், நண்பர்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். இடைவெளி விட்டு பழகுவது நல்லது.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குரு உங்களின் ராசிக்கு 7ஆம் வீட்டைப் பார்ப்பதால் மனைவிவழியில் உதவிகள் உண்டு. குரு 9 ஆம் வீட்டைப் பார்ப்பதால் பணவரவுக்கு குறைவிருக்காது. தந்தைவழிச் சொத்துகள் கைக்கு வரும். குரு லாப வீட்டைப் பார்ப்பதால் மூத்த சகோதரர் ஆதரவாக இருப்பார். புது வாகனம் வாங்குவீர்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

31.12.2019 வரை குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். தீராத பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்களின் ராசியாதிபதியும் அஷ்டமாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் திடீர் பணவரவு உண்டு. வாகனம் வாங்குவீர்கள். உறவினர்களின் திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பக வான் உங்களின் லாபாதிபதியான சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ஆம் பாதத்தில் செல்வதால் எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை மனத்தில் பிறக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். அரசு வகை காரியங்கள் விரைந்து முடியும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும்.

**மகரத்தில் குருபகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குருபகவான் உங்களின் ராசிக்கு 4 ஆம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் தாயாரின் உடல் நலனில் கவனமாக இருங்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல், செலவு கள் இருக்கும்.

**குரு பகவானின் வக்ர சஞ்சாரம்:**

7.7.2020 முதல் 30.7.2020 வரை உள்ள காலகட்டத்தில் உத்திராடம் 1 ஆம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் எதிலும் நிதானித்துச் செயல்படுவது நல்லது. அரசு வகை விவகாரங்களில் அலட்சியமாக இருக்கவேண்டாம்.

31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால் உங்களின் ரசனை மாறும். எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். ஆரோக்கியம்சீராகும். வீடு, வாகனத்தைச்சீர்செய்வீர்கள். சுற்றுலா தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**


உத்தியோகத்தில் சின்னச்சின்ன அலைக்கழிப்புகள் இருக்கும். பணிகளைப் போராடி முடிக்கவேண்டி வரும். சக ஊழியர்களின் கடின உழைப்பால் தடைப்பட்ட வேலைகளை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். உயரதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். இடமாற்றம் சாதகமாகும்.

**மாணவர்களுக்கு:**

மாணவ, மாணவிகள் விரும்பிய நிறுவனத்தில் எதிர்பார்த்த கல்விப் பிரிவில் சேருவீர்கள். அறிவாற்றல் கூடும். சின்னச்சின்ன தவறுகளையும் திருத்திக்கொள்ளுங்கள். நட்புவட்டம் விரிவடையும். ஆசிரியரிடம் தயங்காமல் உங்களின் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியுங்கள்.

இந்த குரு மாற்றம் சிறுசிறு தடைகளையும், தடுமாற்றங்களையும் தந்தாலும் இடையிடையே வெற்றியையும், மகிழ்ச்சியையும் தரும்.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானை வழிபடுங்கள் சங்கடஹர சதுர்த்தியில் விரதமிருங்கள்.



## விருச்சிகம்

விவேகமான சிந்தனையும், வேடிக்கையான பேச்சும், விநோதப் போக்கும்கொண்ட நீங்கள், சமயோஜிதம் மிக்கவர்கள். இதுவரையில் உங்களின் ராசியில் ஜன்ம குருவாக அமர்ந்து வாழ்க்கை மீது ஒருவித வெறுப்பையும், சலிப்பையும் தந்திருப்பார்.

குரு பகவான் 13.11.2020 வரை உங்களின் ராசியை விட்டு விலகி, தன் சொந்த வீடான 2 ஆம் வீட்டில் அமர்வதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். குடும்பஸ்தானத்தில் குரு பகவான் அமர்வதால் இனி மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். பிரிந்திருந்த கணவன், மனைவி ஒன்று சேருவீர்கள். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும்.

உறவினர்கள் வலிய வந்து பேசத் தொடங்குவார்கள். உடல்நலம் சீராகும். சோர்ந்திருந்த நீங்கள் இனி உற்சாகமடைவீர்கள். பெரிய மனிதர்கள், பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மனைவிவழி உறவினர்கள் மதிக்கும்படி நடந்துகொள்வீர்கள். தங்க ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். நீண்ட நாள்களாகப் போக நினைத்த புண்ணியஸ் தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**

குரு உங்களின் ராசிக்கு 6 ஆம் வீட்டைப் பார்ப்பதால் கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். குரு 8ஆம் வீட்டைப் பார்ப்பதால் வெளிநாடு செல்வீர்கள். பங்குச் சந்தையில் பணம் வரும். குரு 10 ஆம் வீட்டைப் பார்ப்பதால் பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். அரசு வகை காரியங்கள் விரைந்து முடியும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

31.12.2019 வரை குரு பகவான் கேதுவின் நட்சத்திரமான மூலம் நட்சத்திரத்தில் செல்வதால் வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக்கொள்வீர்கள். உங்களிடம் பணம் வாங்கிக் கொண்டு ஏமாற்றியவர்கள், திருப்பித் தருவார்கள். தூரத்து சொந்தங்கள் மற்றும் பால்ய சிநேகிதர்கள் உதவுவார்கள். வாழ்வின் முன்னேற்றத்துக்கு காரணமான ஒருவரைச் சந்திப்பீர்கள்.

1.1.2020 முதல் 5.3.2020 வரை மற்றும் 31.7.2020 முதல் 18.10.2020 வரை உங்கள் விரயாதிபதியும் சப்தமாதிபதியுமான சுக்கிரனின் பூராடம் நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் திடீர் பயணங்கள், செலவினங்கள் உண்டு. பழைமை வாய்ந்த புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

6.3.2020 முதல் 27.3.2020 வரை மற்றும் 19.10.2020 முதல் 13.11.2020 வரை குரு பகவான் உங்கள் ஜீவனாதிபதியான சூரியனின் நட்சத்திரமான உத்திராடம் 1 ஆம் பாதத்தில் செல்வதால் உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். கௌரவப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். என்றாலும், வேலைச்சுமையும் இருந்துக்கொண்டேயிருக்கும்.

**மகரத்தில் குரு பகவான்:**

28.03.2020 முதல் 6.7.2020 வரை குரு பகவான் உங்களின் ராசிக்கு 3 ஆம் வீடான மகர ராசியில் அதிசாரமாகியும், வக்கிரமாகியும் அமர்வதால் இனந்தெரியாத சின்னச்சின்ன கவலைகள் வந்து போகும். இளையசகோதர வகையில் மனத்தாங்கல் வரலாம். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:**

7.7.2020 முதல் 30.7.2020 வரை உள்ள காலகட்டத்தில் உத்திராடம் 1 ஆம் பாதம் தனுசு ராசியில் குரு வக்கிரமடைவதால் வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் தடைப்பட்ட காரியங்கள் முடியும். அதிகாரமுள்ள பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். பெற்றோருடன் வீண்வாக்குவாதம் செய்ய வேண்டாம்.

31.7.2020 முதல் 10.09.2020 வரை பூராடம் நட்சத்திரத்தில் குரு வக்கிர கதியில் செல்வதால் சமயோஜித புத்தியால் எதையும் சாதிப்பீர்கள். மனைவிக்குப் புதிய இடத்தில் வேலை கிடைக்கும். அவரின் ஆதரவுப் பெருகும். மனைவிவழிச் சொத்து கைக்கு வரும். புதிய டிசைனில் நகை வாங்குவீர்கள். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும்.

**வியாபாரிகளுக்கு:**

வியாபாரத்தில் கடந்த ஓராண்டு காலமாக ஏற்பட்ட இழப்புகளைச் சரி செய்வீர்கள். இரட்டிப்பு லாபம் உண்டு. புதுவாடிக்கையாளர்களின் வருகையால் உற்சாகமடைவீர்கள். சொந்த இடத்துக்குச் சிலர் கடையை மாற்றி அழகுபடுத்துவீர்கள். சிலர் சில்லறை வியாபாரத்திலிருந்து மொத்த வியாபாரத்துக்கு மாறுவார்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு:**

உத்தியோகத்தில் இனி, உங்கள் உழைப்புக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கும். உயரதிகாரிகளின் மன நிலையை அறிந்து அதற்கேற்ப செயல்படத் தொடங்குவீர்கள். இதுநாள் வரை உங்களை ஒதுக்கியவர்களே முக்கியத்துவம் தருவார்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த சக ஊழியர்களும் மதிக்கத் தொடங்குவார்கள். எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:**

மாணவ மாணவிகளுக்கு நினைவாற்றல் கூடும். படிப்பில் இருந்த அலட்சியப்போக்கு மாறும். கூடுதல் மதிப்பெண்கள் பெறுவீர்கள். வகுப்பறையில் சக மாணவர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள்.

இந்த குரு பெயர்ச்சி தொட்டதையெல்லாம் துலங்கவைப்பதுடன் அடிப்படை வசதிகளையும் அதிகப்படுத்தும்.

**பரிகாரம்:** முருகப்பெருமானை வழிபட்டுவாருங்கள்.

(அடுத்த வாரமும் வரும்)



உன்சாயலில் வேறொருவரை
காணாதிருக்கப் பழகிவிட்டேன்
புத்தம் புதிய முகங்களில் ஏதும்
நின்னுருத் தேக்கம் ததும்பவில்லை
ஆழ்ந்து செல்லும் இருட்சுழியம்
பாலொளிக் கூர்மையில் பரவசித்து
அழைத்துச் செல்கிறது இரண்டற்ற
சங்கமப்பெருவழிப் பாதைக்கு

உணர ஒன்றுமிலா நேரத்தின் ஆழ்மையைப்
பருக விரிகின்றன
கூம்பிக்கிடந்த அன்றாட வாழ்வின் அதரங்கள்
நுரைத்து மேலெழும் நாழிகைகளின்
எண்ணிலாக் குமிழ்களினுள்ளிருந்து
விடுபடுகின்றன
நம்மில் அடைபட்ட பேரேக்கங்கள்

நனையாத நாளொன்றின்
எதிர்த்திசையில் துவங்கி
ஒருவரையொருவர் காணத்தலைப்படுகையில்
என்றோ கைமாறாமல் தங்கிவிட்ட
உள்ளங்கைகளின் வியர்வையும்
இமைகளில் நிலைத்த விழிப்புடன்
கடக்காமல் கைவிட்ட இரவும்
எதிரெதிராக நம் வடிவத்துள்.

- எஸ்.சண்முகம்

# ஒளிப்படக் கலைஞர்களின் ஒன்றிணைவு

**பு.பிரசாந்**

'யாழ் புகைப்படத் திருவிழா 2019' என்ற தலைப்பிடப்பட்ட ஒளிப்படங்களின் காண்பியக்காட்சி 22.11.2019 தொடக்கம் 25.11.2019 வரை யாழ். மத்தியகல்லூரி தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்று முடிந்துள்ளது. கடந்த காலங்களில் இதே போல பல ஒளிப்படக் காண்பியக் காட்சிகள் அங்குமிங்குமாக நடைபெற்றிருக்கின்றன. எடுக்கப்படும் எல்லா ஒளிப்படங்களும் ஏதோ ஒருவகையில் ஒரு கணத்தின் ஆவணமாக மாறிப்போகின்றன. இங்கே நான் ஒரு பார்வையாளனாக வழமையாகக் காணும், பார்த்துக் கடக்கும் ஒளிப்படங்களில் இருந்து எந்தளவுக்கு வேறாக இருக்கிறது அல்லது என்ன மாதிரியான கருத்தியல்களை அந்தச் சூழலில் உருவாக்க முயற்சிக்கிறது என்ற பார்வையில் பார்க்க முயற்சி செய்தேன்.

இன்றைய சூழலில் ஒளிப்படத்துறை ஒரு வருமானம் தரக்கூடிய தொழில்துறையாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வளர்ந்த தொழில்நுட்ப சாத்தியங்கள் அநேகமானவர்கள் கைகளில் சாதாரணமாக ஒளிப்படங்களை எடுக்கக்கூடிய கருவிகளை கொடுத்திருக்கிறது. எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் எல்லோராலும் சரியாக பயன்படுத்த முடிவதில்லை.



இந்தக் காண்பியக்காட்சி, ஒளிப்படத்துறையில் சாதிக்கத் துடிப்பவர்களுக்கு ஒரு திறப்பாக இருக்கிறது. கண்டும் காணாமலும் இருக்கும் அவர்கள் பொதுவெளியில் அறியப்படுவதற்கும் உத்வேகம் பெறுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் வாய்ப்புத் தேடித்தருகிறது. இந்தக் காட்சியின் போது பெறவும் கொடுக்கவும் ஏராளமான சாத்தியங்கள் இருந்தன. குறைபாடுகளைத் தாண்டி இதுவொரு வெற்றிகரமான முயற்சியும் முன்னெடுப்பும். என்னைப் பொறுத்தவரைக்கும் இந்தப் படைப்புக்களின் ஒழுங்குபடுத்தல் ஒருவகையில் ஒளிப்படக்கலைஞர்களை ஒரு புள்ளியில் இணைக்கிற பாலமாகவும் அதேநேரம் சமூகப் பிரக்ஞையுடன் ஒரு வெளிப்பாட்டுக் கலைவடிவமாக ஒளிப்படக்கலையை மாற்றுவதற்கும், பார்ப்பதற்கும் செய்யப்பட்ட முயற்சியாகும்.








வாசிகை பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், கருத்துகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி:
sinnarajavimalan18@gmail.com

# கைநழுவ விடப்பட்ட சந்தர்ப்பம்:
## பாடலாசிரியர் யுகபாரதியுடனான கலந்துரையாடல்

**சிற்றறிவன்**

கடந்த 22.11.2019 வெள்ளிக்கிழமை திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த கவிஞர்,பாடலாசிரியர், பத்தி எழுத்தாளர் என நன்கறியப்பட்டிருந்த பல்துறைஆளுமை யுகபாரதியுடன் ஒரு கலந்துரையாடல் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பயன்மிக்க பொழுதாக அமையுமென்ற நம்பிக்கை யுடன் சென்றிருந்தேன். நிகழ்வுக்கு வழமைபோலவே பத்துப் பேரளவிலேயே வந்திருந்தனர். வேலைநாளின் இறுதி என்பது வரவுக்குறைவுக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். சரியாக ஒரு மணித்தியால தாமதத்துடன் கலந்துரையாடல் தொடங்கியது.

பல்துறை ஆளுமை ஒருவருடனான கலந்துரையாடலாக அமையாது வெறுமனே சினிமாப்பாடல் எனும் குறுகிய வட்டத்துள்ளேயே அமைந்திருந்தது என்றே உணரமுடிந்தது. சினிமாத்துறை என்பது சாதாரணமானதல்ல. பரந்து விரிந்த ஒருபெரியதுறை. ஆனால் சிறுபிள்ளைத் தனமான கேள்விகளினால் கலந்துரையாடல் விரிவடைய முடியாதிருந்தது. குறிப்பாக 'ஊதாக் கலரு ரிப்பன்' பாடலில் வரும் 'யாரு உனக்கு அப்பன்' காசிஆனந்தனின் வெள்ளைக்காரன்தான் உனக்கு அப்பனா? என்பதன் சாயலில் இருக்கிறதே? என்பன போன்ற கேள்விகள் தாராளமாக இருந்தன. இது சினிமாப் பாடல் தொடர்பான அறியாமையை வெளிப்படுத்துவதாகவே





உணரமுடிகிறது. ஏற்பாட்டாளர்களினால் சீர்செய்ய முடியாதவாறு கிடைத்த சொற்ப நேரத்தைப் பயனுள்ளதாக கதைக்கவிடுங்கள் என்று தம்பாட்டில் உரையாடலை வளர்த்தனர்.

கவிதைப்புலம், சினிமாவில் மொழிப்பயன்பாடு, ஈழத்துக்கவிதை, ஈழத்துப் பாடலாக்க முயற்சிகள் எனக் கலந்துரையாடியிருக்க முடியும். அவ்வாறான கதையாடல் நிச்சயமாகப் பயனுள்ளதாய் இருந்திருக்கும். நடைபெற்ற கலந்துரையாடல் வெறுமனே யுகபாரதியினுடைய பாடல்கள் தவிர்ந்த ஏனைய தமிழக சினிமாப் பாடலாசிரியர்களின் சில பாடல் வரிகளுக்கான விளக்கம் பெறுவதுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது ஏமாற்றத்தையே தந்தது.

கலந்துரையாடல் என்பது பரஸ்பர கருத்துப்பரிமாற்றமாக இருக்கவேண்டும். பேசுபொருட் பரப்பு விரிவடைந்து செல்ல வேண்டும். அத்துடன் திசைப்படுத்தப்பட்டு குறித்த விடயம் தொடர்பானதொரு முடிவை அடையவோ அண்மிக்கவோ வேண்டும். கேள்விகள் விரிவான பரந்துபட்ட பதில்களை நோக்கியதாக அமையவேண்டும். முற்கற்பிதங்களை அல்லது குறித்தவொரு முடிவை எதிர்பார்த்து அமைதல் கூடாது என்றெல்லாம் பலவிதமாக கூறப்பட்டு வருகிற நிலையில் அன்றைய அந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஏமாற்றம் மட்டுமே நிறைவாக உள்ளது. ஏற்பாட்டாளர்கள் மட்டுமல்ல பங்குபற்றும் ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ளும் நாளுக்காய் காத்திருப்போம்.

## ஐரோப்பிய...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிப்டெம் *(Liberal democrat)* எனும் மூன்றாவது கட்சிக்கு ஆதரவளிபவர்களும் பெருமளவில் இருக்கின்றனர். தமிழ் மக்கள் பரவி வாழ்வதால் அவர்களுடைய வாக்குகள் பொதுதேர்தல்களில் வெற்றி தோல்விகளை தீர்மானிக்கும் என்று சொல்லமுடியாது.

எதிர்க்கட்சியான லேபர் கட்சி இடதுசார்பு அரசியல் தன்மை கொண்ட கட்சியாதலால் தனது வாங்கு வங்கியான வடஇங்கிலாந்து பகுதிகளில் இருந்தே அதிக தொகுதிகளை கைப்பற்றுவது வழக்கம். ஆயினும் இவர்களில் பெரும்பான்மையினர் பிரித்தானியா ஐரேப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என விரும்புகிறவர்கள். எதிர்வரும் பொதுத்தேர்தலில் இவர்களின் வாக்குகள் முக்கியமானதாகும். எனவே இவர்கள் வழக்கம்போல் இடதுசார்பு தன்மை கொண்ட லேபர் கட்சிக்கு இம் முறையும் வாக்களிப்பார்களா அல்லது வெளியேற வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சிக்கு வாக்களிப்பார்களா! தேர்தல் தான் பதில் கூறவேண்டும். •

## யாழ்ப்பாணத்தின்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு வெறும் பத்திரிகை செய்தியை மட்டும் வாசித்து கொண்டிருக்காமல் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் நல்ல நூல்களை வாசித்து பார்ப்பதும் அவைகளிலிருந்து புறிப்பெடுத்து கொள்வதும் பின்னர் உதவியாக இருக்கும்"என வளர்ந்து வரும் ஊடகவியலாளர்களுக்கு பெருமாள் ஐயா ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்திய பத்திரிகை துறை அறிஞர் அஜி. கே. பூரி பத்திரிகையாளருக்குரிய தகுதிகள் பற்றிக் கூறியவற்றையும் அவர் குறிப்பிட்டு, அவற்றையும் ஊடகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை சொல்லியுள்ளார் .

"முதலில் நன்றாக எழுத கூடியவனாக இருக்க வேண்டும். இரண்டாவது அவனுக்கு செய்தி மூக்கு இருக்க வேண்டும். இத்துறையில் ஒருவர் வெற்றி பெறுவதற்கு பி. ஏ., எம்.ஏ. போன்ற பட்டங்களோ டிப்ளோமா போன்ற தொழில் பயிற்சிகளோ அவசியமில்லை. இத்துறையில் முன்னேறி பிரகாசிக்க இவை மட்டும் போதாது", என அந்த அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

தன் நிலை தொடர்பாக அவர் குறிப்பிடுகையில் "1957 ஆம் ஆண்டில் பத்திரிகை துறையில் நான் கால் வைத்தேன்1988 ஆம் ஆண்டு வரையில் இத்துறையில் துடிப்புடன் செயல்பட்டு வந்துள்ளேன். இதில் ஏறத்தாழ 25 ஆண்டுகள் 'ஈழநாடு'வில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து பதில் ஆசிரியர் என்ற நிலையில் அத்துறையிலிருந்து ஒதுங்க வேண்டியேற்பட்டது." எனப் பதிவு செய்துள்ளார்.

பெருமாள் ஐயாவின் பிறப்பிடம் மலையகமாக இருந்தாலும் இறுதி காலம் வரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். யாழ்.மண்ணோடும் மக்களோடும் இரண்டறக்கலந்தவர். யுத்த நெருக்கடிகள் இடப்பெயர்வுகள், எறிகணைத்தாக்குதல், விமானத்தாக்குதல், துப்பாக்கி வேட்டுகள், பீரங்கிதாக்குதல், பொருளாதார தடை என அனைத்தையும் எதிர்கொண்டு யாழ்.மண்ணில் வாழ்ந்தவர். அவர் தென்னிலங்கையில் வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் புகுந்த இடத்தில் எளிமையாக வாழ்ந்தார். இந்த மண் மீதும் மக்கள் மீதும் தீவிரமான பற்றுக்கொண்டவர் அதனால் எம்மவரில் ஒருவராகவே நடமாடினார்.

பத்திரிகை துறையில் இருந்த காரணத்தினால் அவருக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அவரது இழப்பு பெரும் துயரத்தை தந்தாலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தனது உடலை வழங்கியதன் மூலம் தனது முற்போக்கு சிந்தனையை நிறைவு செய்துள்ளார். அவர் எம்மோடு இல்லாத போதும் பல ஆண்டுகளாக மௌனித்து போன ஈழநாடு தற்பொழுது புதுப்பொலிவுடன் பிறப்பெடுத்துள்ளது இந்த செய்தியை வானத்திலிருந்து கேட்டு பெருமாள் ஐயா மகிழ்வார் என்று நம்புவோமாக.

# சொல்லத்தான் நினைக்கிறேன்...!

## இனிய தமிழ் இனி...?




சமீபத்தில் நண்பர் ஒருவர் தன் எட்டு வயது மகளுடன் வீட்டுக்கு வந்திருந்தார். இவர் வெளிநாட்டில் குடும்பமாக வாழ்பவர். என் மகனோடு ஒரு காலத்தில் ஒன்றாகப் படித்தவர். மகளுக்கு தமிழ் தெரியாது, நீங்கள் கேட்பதை ஆங்கிலத்தில்தான் கேட்க வேண்டும் என்று வந்தவுடனேயே எச்சரித்து விட்டார் சிறுமியின் தந்தை. தமிழ் பிள்ளையோடு ஆங்கிலத்தில்தான் பேசவேண்டுமாம். தன் அடையாளத்தை தொலைத்து விட்டு நிற்கிறது ஒரு தமிழ்க் குழந்தை.

"ஏன் நீங்கள் உங்கள் பிள்ளையோடு வீட்டில் தமிழில் உரையாடி, தமிழ் பேச, ஏன் கற்றுக் கொடுக்கவில்லை?" என்று கேட்டேன்.

சிரித்தபடியே, "ஆர்வம் இல்லாத ஒன்றை எப்படித் திணிப்பது?" என்று அந்த இளம் தந்தை பதிலுக்கு ஒரு கேள்வி என்னைக் கேட்டார். நான் மேலே பேசவில்லை. வீட்டுக்கு வந்தவரிடம் எதற்கு வீணான விவாதங்கள்?

இதை ஏன் சொல்ல வந்தேன் என்றால், இன்றைய யதார்த்தமும் இதுவேதான் என்பதைச் சுட்டிக்காட்டவேதான். பிள்ளைகள் தாய்மொழியான தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமில்லாதவர்களே வெளிநாட்டில் வாழ்கின்ற பல பெற்றோர்கள் இருக்கின்றனர். தம் பிள்ளைகளுக்கு விருப்பமில்லை என்று அவர்கள் மீது சுலபமாகப் பழியைப் போட்டு விடுகிறார்கள். இந்த மொழியைப் படித்து என் பிள்ளை எதை இந்த மண்ணில் சாதிக்கப் போகின்றது என்று நீங்கள் நினைக்கிறார்கள் போலும்...! மறுக்கவில்லை.

இன்னொரு நாட்டில் பிறந்து, அங்குள்ள பிள்ளைகளோடு ஒரு பிள்ளையாகவே கல்வி கற்று, அந்த நாட்டுப் பிரஜைகள் போலவே அவர்கள் பிள்ளைகளும் வாழ்கின்றனர். இவர்களுக்கு தமிழ் அறிவு என்ன செய்யப் போகின்றது? வாழ்க்கையில் அப்படி என்ன மாற்றத்தைத் தரப்போகின்றது என்ற கோணத்தில் நீங்கள் சிந்திப்பதெல்லாம் சரிதான்.

தமிழ் உழைக்கும் மொழியா?இல்லைத்தான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் எல்லாமே பணத்திற்காகவா செய்யப்படுகின்றது? பணம் சம்பாதிப்பது என்பதுதான் வாழ்வின் ஒரேயொரு குறிக்கோளா?

உங்களுக்கென்று ஓர் அடையாளம் இருக்கிறதே. அதை எப்படி உங்களால் மறக்காமல், மறைக்காமல் இருக்க முடியும்?

தன்னோடு கற்கும் சக வகுப்புப் பிள்ளைகளோடு. உங்கள் பிள்ளையும் உட்கார்ந்திருக்கின்றது. புதிய வகுப்பு ஆசிரியர் இந்தப் பிள்ளைகளை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து வைக்கும் நேரம் இது. ஒவ்வொரு பிள்ளையும் தன்னைப் பற்றிய சுய அறிமுகத்தை ஆரம்பிக்கின்றது. தன் பெயரை மட்டுமல்ல, வயதை மட்டுமல்ல இன்னும் பலவற்றை அந்தப் பிள்ளைகள் சொல்லியாக வேண்டும்.

உங்கள் பிள்ளையின் முறை வருகின்றது. தன் பெயரைச் சொல்கிறது. வயதைச் சொல்கின்றது. இனி அப்பா, அம்மா பற்றிச் சொல்லியாக வேண்டும். இருவரும் இலங்கையிலிருந்து வந்து , 20 வருடங்களுக்கு முன்பு குடியேறியவர்கள் என்று பிள்ளை சொல்கிறது. தன் பெற்றோர்கள் இலங்கைத் தமிழர்கள் என்றும் சொல்கிறது.

இங்கேதான் ஒரு முக்கிய விடயத்தை நாம் கவனிக்க வேண்டிய நிலை... "இலங்கைத் தமிழர்கள் என் பெற்றோர்கள்" என்று கூறும் பிள்ளை தன் தாய் மொழியை எதுவென்று கூறப் போகின்றது? இன்னொரு மண்ணில் பிறந்து, சரளமாக அந்த நாட்டு மொழியைப் பேசும் நிலை வந்துவிட்டால், அது தாய் மொழியாக மாறி விடுமா? அல்லது மாற்றப்பட்டுத்தான் விடுமா? தமிழ்ப் பெற்றோருக்கு எந்த மண்ணில் ஒரு பிள்ளை பிறந்தாலும் அது தமிழ்க் குழந்தைதான். அந்தத் தமிழ்க் குழந்தையின் அடையாளம் தனித்துவமானது. அந்தக் குழந்தை எத்தனை மொழிகளைக் கற்றாலும் அதற்கு நன்மையேதான். ஆனால் தன் அடையாளத்தைத் தொலைத்து விடும் தன் தாய் மொழியைக் கற்காதவரை அது குழந்தைக்கு பெரிய இழப்புத்தான்!.

ஒரு மொழி பற்றி தெளிவாகத் தெரியாதவரை, அந்த மொழியின் சொற்கள் கேட்பவர் காதுகளில் விழும்போது நகைப்புக்கு இடமானதாக இருப்பது வழமை. மொழியை முறையாகக் கற்றவர்களிடையே அது பேசப்படும்போது அது உயர்ந்த இடத்தைப் பிடித்துவிடுகின்றது. இது எந்த மொழிக்கும் பொருந்தும். பேச வேண்டிய இடங்களில் தேவையானதைப் பேசுவதும், எந்த மொழி எந்த நேரத்தில் பேசப்பட வேண்டுமோ அதை அந்த நேரத்தில் பேசுவதும் புத்திசாலித்தனமானது – பயனுள்ளது.

கலாசாரமும் அப்படித்தான். அவரவர் மண்ணில் அதற்குரிய மதிப்பு தனித்துவமானது. உங்கள் வீடுகளில் சோற்றைப் பிசைந்து, கைகளால் சுவையாகச் சாப்பிடுகிறீர்கள் மகிழ்ச்சி. இங்கிலாந்தில் விடுதலை நாட்களைக் கழிக்கும்போது, ஒரு ஹோட்டலில் சாப்பிட வேண்டி வருகிறது. அங்கே நீங்கள் உங்களை மாற்றிக் கொள்கிறீர்கள். கரண்டி, கத்தி, முள்ளுக் கரண்டி என்று பல உங்கள் கைகளாகின்றன. அந்தந்த இடங்களில் நாம் மாறாத வரை, நாம் மாற்றிக் கொள்ளாத வரை, வீடே சிறையாகி விடுவது இயல்பு.

இலங்கைக்கு உங்கள் உறவுகளிடம் காண்பிக்க பிள்ளையைக் கொண்டு வருகிறீர்கள். அதை அரவணைக்க, கொஞ்சி மகிழ, பேசி உறவாட வருபவர்கள் எல்லோருமே , உங்கள் பிள்ளைக்குத் தெரிந்த அந்நிய நாட்டு மொழியைப் பேசத் தெரிந்தவர்களாக இருக்கப் போவதில்லை. இது எந்த நாட்டிலிருந்து வருபவர்களுக்கும் பொருந்தும். மாநாடுகளில் மௌன அஞ்சலி செலுத்துவது போல, அல்லது ஊமையன் சைகை மொழியில் பேசுவது போல, உங்கள் பிள்ளைகள் மௌனமாக, உங்கள் உறவுகளோடு பழகுவதை, நீங்கள் விரும்புகிறீர்களா? மொழிதானே ஒருவர் மீதான அன்பைப் பகிர, பாலமாக செயற்படுகின்றது? இந்த மொழி இல்லாமல், அந்நிய நாடுகளில் வாழ்ந்து கொண்டு, தமிழை உங்கள் குழந்தைகளுக்கு அந்நிய மொழிகளாக்கி, பிள்ளைகளை உங்கள் உறவுகளிடமிருந்து அந்நியப்படுத்த வேண்டும் என்பதுதான் உங்கள் ஆசையா?

அந்நிய மண்ணில் தமிழ்ப் பாடசாலை ஒன்றை நடத்தி, அங்கு பிறந்த பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுத்து, அவர்கள் சரளமாகப் பேசுவதைப் பல ஆண்டுகள் கேட்டு மகிழ்ந்த ஓர் ஆசிரியர் – பொறுப்பாளர் என்ற முறையில் எம் சமூகத்திற்கு நான் சொல்ல வருவது இதுதான்... உங்கள் பிள்ளைகள் தமிழில் சிறுகதை , கவிதை எழுதிச் சிறக்க வேண்டும் என்பதல்ல நோக்கம். தமிழரோடு உரையாட முடிந்தால், "அம்மா சுகமா. நான் நலம்", என்று ஒரு வரிக் கடிதம் எழுதும் அறிவிருந்தாலே அதுவே பெரிய விடயம். வெளிநாட்டில் வாழும் உறவுகளே வீட்டில் தமிழைச் சொல்லிக் கொடுங்கள். அங்குள்ள தமிழ்க் கடைகளில் வாங்கக் கூடிய சிறிய படங்களுடன் கூடிய பாலர் புத்தகங்களை வாசிக்க வாங்கிக் கொடுங்கள். கூடவே இருந்து வாசித்துக் காட்டுங்கள். தினமும் தமிழில் உரையாடுங்கள். சிறுவயதில் ஆரம்பித்து விடுங்கள். இது அப்படியொன்றும் மந்திர வித்தையல்ல. சுலபமாக இளைய பிள்ளைகள் தமிழைக் கற்று விடுவர். தமிழ் பேசத் தெரியாது, இன்னொரு மொழியில் உரையாடும் தமிழ்ப் பிள்ளைகளைக் காணும்போது, இதயம் கனக்கிறது... வலிக்கிறது...இனிய மொழி இனி அழிந்து விடுமோ என்று சொல்ல நினைத்த மன ஆதங்கத்தின் வெளிப்பாடே இது!

- யாழவன்

## சினிமா



‘இந்தியன் 2’ படத்தில் இந்தியன் தாத்தாவான சேனாபதியின் 80 வயது தோழியாக நடிக்கிறார் காஜல் அகர்வால். இவர் யார் என்ற பின்னணிக் கதையும் படத்தில் உள்ளதாம். அதற்காக காஜல் அகர்வால் களரி கற்றுவருகிறார்.



விஜய் இயக்கும் ஜெயலலிதா வாழ்க்கை வரலாறான ‘தலைவி’ படத்தில் என்.டி.ராமராவ் பாத்திரத்தில் நடிக்க அவரின் பேரன் ஜூனியர் என்.டி.ஆரை அணுகியுள்ளனர். அவரோ, ராஜமௌலி படத்தில் நடிப்பதால் மறுத்து விட்டாராம்.



கீர்த்தி சுரேஷை வைத்து ‘பெண்குயின்’, ஐஸ்வர்யா ராஜேஷை வைத்து பெயரிடப்படாத படம் என கார்த்திக் சுப்புராஜ் தயாரிப்பில் அடுத்தடுத்து படங்கள் உருவாகின்றன.




ஐசரி கே.கணேஷ் தயாரிப்பில் கௌதம் மேனன் மூன்று படங்களை இயக்கவிருக்கிறார். அவற்றில் ஒன்று அனுஷ்கா நடிக்கும் நாயகியை மையமாக கொண்ட படம். இதில் வில்லியாக ‘பிக்பொஸ்’ அபிராமி நடிக்கவுள்ளார்.




அறிமுக இயக்குநர் கார்த்திக் யோகி இயக்கத்தில் நாயகன், கொமெடியன், வில்லன் என மூன்று விதங்களில் சந்தானம் நடிக்கும் படம் ‘டிக்கிலோனா’. இதில் அவருக்கு ஜோடியாக ‘நட்பே துணை’ அனாகாவும் ஷெரின் காஞ்ச்வாலாவும் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளனர்.



விஷாலின் ‘சக்ரா’ படத்தில் ஷ்ரத்தா கபூர் பொலிஸ் வேடத்தில் ரெஜினா கஸண்ட்ரா வில்லன் பாத்திரத்திலும் நடிக்க உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து, ஸ்ருஷ்டி டாங்கேவும் ஒப்பந்தமாகி உள்ளார்.



விஜய் சேதுபதி, மேகா ஆகாஷ் நடிக்கும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் நகைச்சுவை நடிகர் விவேக். விஜய் சேதுபதியும் விவேக்கும் சேர்ந்து நடிக்கும் முதல் படம் இது. இதனை எஸ்.பி.ஜனநாதனிடம் உதவி இயக்குநராக இருந்த வெங்கட கிருஷ்ணா ரோகாந்த் என்பவர் இயக்குகிறார்.



‘ப்ளைண்ட்’ எனும் கொரியன் படத்தை ‘நெற்றிக்கண்’ என்ற பெயரில் தமிழில் விக்னேஷ் சிவன் தயாரிக்க, நயன்தாரா நடித்து வருகிறார். இதன் ஹிந்தி தயாரிப்பில் சோனம் கபூர் நடிக்க ஒப்பந்தமாகவுள்ளார்.

நீத்தார் சிறப்பு

# யாழ்ப்பாணத்து பத்திரிகைத்துறை முன்னோடி "ஈழநாடு" பெருமாள்

**என். கே. துரைசிங்கம்,**
(முன்னாள் உதவி ஆசிரியர். ஈழநாடு)

உயிர்கள் எப்படித் தோற்றம் பெறுகின்றதோ அதேபோல அவற்றின் இழப்பும் நிகழ்கின்றது. இது இயற்கை நியதி. மனித இழப்பு மட்டும் தாங்க முடியாத வலிகளை சக மனிதர்களுக்கு ஏற்படுத்துகிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் நிகழும் வாழ்கைதான் மனிதனை அடையாளப்படுத்துகின்றது. இவ்வாறான ஓர் உணர்வை எனக்குள் பலரது மரணம் ஏற்படுத்தியது உண்டு. அந்த வரிசையில் மூத்த பத்திரிகையாளர் பெருமாள் ஐயாவின் இழப்பும் காயங்களை ஏற்படுத்தி விட்டது.

ஈழநாடு பத்திரிகையில் அறிமுக நாளிலிருந்து பத்திரிகைத் துறையின் நுணுக்கங்களை அனுபவங்களை அவரது பட்டறையில் கற்றதனால் பெற்ற பயனாளிகளில் நானும் ஒருவனானேன். எழுதுபவர்கள் பிற எழுத்துகளைப் படிக்க வேண்டும் எழுத்துகளை நேசிக்க வேண்டும். வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான் என்பது வெறும் சொல்லாடல் அல்ல என்பதனைப் புரிந்து உணர்ந்து கொண்டால் எழுத்து வசமாகி விடும்.

பெருமாள் ஐயாவுக்கு எழுத்து ஒரு கொடை. அவர் எது எழுதினாலும் அது வாசகர்களுக்கு தீனியாகும். செய்திகள் மட்டுமல்ல ஆசிரியர் கருத்து, ஆய்வுக் கட்டுரை, விமர்சனம் , சிறுகதை, நாடகம், கவிதை என அவரது எழுத்துலகம் விரிவடையும் அதனால்தான் அவரை கண்டுபிடித்து ஈழநாடு குடும்பத்தில் ஊன்றி விட்டவர் ஈழநாடு ஸ்தாபகர் கே.சி.தங்கராசா.

உதவி ஆசிரியர், வாரமலர் ஆசிரியர், பதில் ஆசிரியர் எனப் பல தரங்களில் இயங்கியவர். பத்திரிகை ஆசிரிய பீடத்தில் பணியாற்றுபவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுவது இல்லை என்ற குறைபாடு ஈழநாடு வில் இருந்தது பெருமாள் ஐயா இதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். பத்திரிகையாளர்களுக்குரிய இலங்கை சம்பள நிர்ணய சபையினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை பெற்று பரிசீலனை செய்தார்கள் ஆசிரியர் பீடத்தினர் – கூடி ஆராய்ந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஈழநாடு வரலாற்றில் முதல் தடவையாக ஈழநாடு ஆசிரியர் பீட நலன்புரிச்சங்கம் உருவாக்கப்பட்டது.

காப்பாளர் பி. எஸ். பெருமாள், தலைவர் அலுவலக நிருபர் ஏ. வி. மாணிக்கம், செயலாளர் உதவி ஆசிரியர் அனந்த் பாலகிட்ணர், பொருளாளர் அலுவலக நிருபர் கா.யோகநாதன் ஆகியோருடன் உதவி ஆசிரியர்கள், செய்தியாளர்கள் என எல்லோரையும் உள்ளடக்கி நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இந்த சங்கத்திற்கு தேவையான வழிகாட்டல்களை பெருமாள் ஐயா வழங்கி வந்தார். சக ஊழியர்களின் உயர்வுகளில் அக்கறையுடன் செயற்பட்டவர். பத்திரிகைத்துறையில் இருப்பவர்கள் அறிவாளிகளாக, ஆற்றல்மிக்கவர்களாக மட்டுமல்ல நல்லவர்களாக, வல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துவார்.



'ஈழநாடு' நாளிதழின் முன்னாள் ஆசிரியர் எஸ். பொருமாள் அவர்களின் 31ஆம் நாள் நினைவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

சமூக அக்கறையுடன் எழுதவேண்டும் பத்திரிகையாளர்களும் ஒரு வகை எழுத்தாளர்களாக இருப்பதனால், படைப்பாளிகளுக்குரிய பக்குவத்தையும் பெறவேண்டும் என்பதும் அவரது அனுபவ வாசகங்கள். 1998 ஆம் ஆண்டிலிருந்து ஈழநாடு வெளிவராத போதிலும் அவ்வப்போது சந்திக்கின்ற போதெல்லாம் பரஸ்பரம் உரையாடுவோம். சக பத்திரிகையாளர்கள் மற்றும் நவீன ஊடக உலகம் பற்றிய பேச்சுகளே அங்கு பேசு பொருளாக இருக்கும். நான் புலம்பெயர்ந்த பின்னர் பெருமாள் ஐயா போன்றவர்களுடனான தொடர்புகளையும் இழந்திருந்தேன்.

2014 ஆம் ஆண்டு சிறுகதை தொகுப்பு ஒன்றை வெளியிட்ட பொழுது அதற்கான மதிப்புரை, எதிர்பாரா மல் பெருமாள் ஐயாவிடமிருந்து கிடைத்தது மகிழ்ச்சி. எனது ஆரம்ப கால எழுத்தையும் தற்போதைய நடையையும் அவர் விதந்துரைத்துள்ளார். அவர் இல்லாத தருணத்தில் மீண்டும் அதனை புரட்டுகின்றபோது தனது எழுத்துகளால் கூட வழிநடத்துகிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

அவரது வழித்தடத்தில் நடந்து வந்ததில் நானும் ஒருவன் என்பதில் பெருமையடைகிறேன். பெருமாள் ஐயாவின் ஆற்றல், அனுபவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக அவரை அணுகிய போது 2002 இல் தான் எழுதிய பத்திரிகைத் துறை அனுபவம் தொடர்பான நூல் ஒன்றை அனுப்பி வைத்தார். எனது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் அவரது புத்தகம் அமைந்திருந்தது. பத்திரிகைத்துறையில் தான் எப்படி உருவானேன் என்பதையும் தனது பயணத்தை பற்றியும் எழுதியுள்ள அவர் அதன் நெளிவு சுளிவுகளையும் அதில் படம்பிடித்து காட்டியுள்ளார். இதனை நுகர்ந்து உள்வாங்கிய பின்னர் இன்னும் அவரிடமிருந்து கற்க வேண்டும் என்பதற்காக நேர்காணல் கேள்விகளை அவருக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைத்திருந்தேன் நல்ல விடயம் இதற்கான பதில்கள் எழுத வேண்டும் என ஆவலில் இருந்தார். ஆனால், அது நடக்கவில்லை.

எம்மை விட்டு பிரிவதற்கு சில நாட்களுக்கு முன் சக பத்திரிகையாளர் ஒருவரின் நேர்காணலை யாழ்ப்பாண பத்திரிகையில் வெளியிட்டிருந்தேன். அதனை வாசித்த அவர் எனது பெயரை சொல்லி பாராட்டினார் என நண்பர்கள் மூலம் தெரியவந்தது. எண்பதுகளை தாண்டியும் வாசிப்பு மன நிலையில்தான் வாழ்ந்தார். மருத்துவ சோதனை தொடர்ந்தது உணவு மற்றும் உடல் நலத்திற்கு தேவையான அனைத்தையும் கடைப்பிடித்து வந்தவர் எல்லாவற்றையும் கடந்து தனது 86 வயது வரையும் வாழ்ந்து காலமாகி விட்டார். அவரது பத்திரிகைப் பட்டறிவை – ஆழ்ந்த புலமையை தமிழ்ப்பத்திரிகை உலகம் கண்டு கொள்ளவில்லை. புரிந்துகொள்ளவில்லை அவரைப் பயன்படுத்தத் தவறிவிட்டது.

"பத்திரிகைத்துறை சில நினைவுக் குறிப்புகள்" என்ற அவரது நூல் இதுவரையும் வெளிச்சத்துக்கு வரவில்லை. விமர்சனமோ அல்லது மதிப்புரையோ ஊடகங்களில் இடம்பெறவில்லை என்பது குறைபாடாக உள்ளது. பத்திரிகையாளனின் நிலைமை என்ற தலைப்பின் கீழ் அவர் அந்த நூலில் எழுதியுள்ளதைச் சுட்டிக்காட்டுகிறேன் "பத்திரிகையாளன் பெரும்பாலும் எல்லாத் தரப்பினரோடும் எப்பொழுதும் நண்பர்களாய் இருக்க முடிவதில்லை. ஒரு நல்ல செயலுக்காக ஒருவரை ஒரு முறை பாராட்டி எழுதுபவர், மற்றொரு முறை வேறொரு காரணத்துக்காக அவரை விமர்சிக்கவும் வேண்டியேற்பட்டு விடுகின்றது. நடுநிலை பத்திரிகை, பத்திரிகையாளன் நிலை இதுதான். இத்தகைய நிலையை படித்தவர்கள்கூட புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். பத்திரிகையில் இருக்கும்வரை அவனோடு ஒட்டி உறவாடுகிறவர்கள் அப்பத்திரிகையிலிருந்து விலகியவுடன் தூர ஒதுங்கிகொண்டு விடுகிறார்கள். எதுவானாலும் ஒரு நல்ல பத்திரிகையாளன் இந்நிலை கண்டு துவண்டுவிடமாட்டான். எப்பொழுதுமே அவன் தன் நடுநிலையான போக்கிலிருந்து பிசக மாட்டான்" என்ற விரக்தி நிலையில் அவர் எழுதியுள்ளார்.

தன்னோடு சம காலத்தில் பணியாற்றிய பத்திரிகையாளர்கள் குறித்தும் இந்த நூலில் பதிவு செய்துள்ளார்.

"நான் நெருங்கி பழகி புரிந்து கொண்ட பத்திரிகையாளர்களில் எஸ்.எம்.கோபாலரத்தினம் குறிப்பிடத்தக்கவர். பெரிய படிப்போ பட்டமோ அவருக்கு இருக்கவில்லைத்தான் ஆனால் இதழாளர்களுக்கு இருக்க வேண்டிய திறமைகள், தகுதிகள் யாவும் அவரிடமிருந்தன. பத்திரிகைத் துறை கலையானது இயற்கையாகவே சிலருக்கு அமைந்து விடுகிறது என்றால் கோபாலரத்தினத்துக்கு என்பேன்."என்று மூத்த பத்திரிகையாளர் கோபு பற்றி பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"பத்திரிகையாளன் என்று சொல்லப்படுபவன் பல்வேறு விடயங்களை பற்றியும் அறிந்தவனாகவும் எந்த விடயத்தையும் ஒரு புதிய கோணத்தில் பார்ப்பவனாகவும் இருக்க வேண்டும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

ஒரு கதை

# சொல்லுங்க... சொல்லுங்க...!



ஆர். நடராஜன்

இந்த மனுஷன் எழுந்திருப்பதற்கு முன்பே காபியை அவர் தலைமாட்டில் வைத்துவிடலாம் என்ற எண்ணத்தில் சரோஜா அவர் தூங்குகிறாரா, எழுந்துவிட்டாரா என்று பார்ப்பதற்கு அவர் அறைப்பக்கம் போனார். சப்தம் கேட்டு எழுந்துகொண்ட சரோஜாவின் கணவர் சாரங்கன் எழுந்து நின்று அறையில் மாட்டியிருந்த தன் கட்சித்தலைவி படத்திற்கு முன்னால் நின்றுகொண்டு 'அம்மா போற்றி, என் தெய்வம் போற்றி, இதய தெய்வம் போற்றி, சகல தெய்வமும் நீயே என்றெல்லாம் சொல்லிவிட்டு, மனைவியின் பக்கம் திரும்பி, "அம்மா வாழ்க, அம்மாவின் திருநாமம் வாழ்க, அம்மாவின் பெயரால் கேட்கிறேன், ஒரு கப் காபி கொண்டு வா " என்றான்.

சரோஜா மிகுந்த கடுப்புடன் இப்படி எல்லாம் கேட்டால் நான் காபி தரமாட்டேன். காபி வேணும்னா நேரா கேட்டுத் தொலைங்க. கட்சி மீட்டிங்ல பேசற மாதிரி வீட்டுலயும் பேசாதீங்க. இந்த கட்சிக்கு வந்ததுக்கு அப்புறம்தான் நீங்க இவ்ளோ மோசமாயிட்டீங்க. இனிமேலும் அம்மா துதிபாடி காபி கேட்டா அம்மா படத்துலயே ஊத்திடுவேன் என்றார் எரிச்சலுடன்.

"அம்மாவின் பெயரால் உன்னை மன்னித்தேன், போய்த்தொலை " என்றார் சாரங்கன்.

"கருமம் கருமம்" என்று சொல்லி தலையில் அடித்துக் கொண்டு சமையல் அறைக்குப் போனாள் சரோஜா.

காபி சாப்பிட்டுக்கொண்டே அன்றைய செய்தித்தாளை புரட்டி விட்டு குளிக்கப்போனார் சாரங்கன். அப்போது சமையல் அறையை எட்டிப்பார்த்து சரோஜாவிடம், "நேற்றைக்கே உன்னை அம்மா சோப்பு வாங்கி வைக்கச் சொன்னேனே, எங்கே? என்று கேட்டார்.

"அது என்ன அம்மா சோப்பு எல்லா சோப்பும் ஒரே சோப்பு தானே"

"அப்படி சொல்லமுடியாது சரோஜா, அம்மா சோப்பு எளிதில் கரையாது, அம்மா டவல் எளிதில் கிழியாது"

"அதெல்லாம் கிடக்கட்டுங்க நீங்கள் பத்திரமா பாத்ரூமுக்கு போங்க, உள்ளே அம்மா பக்கெட் தடுக்கி அம்மா குழாய்ல மோதி மண்டைய உடைச்சுக்காதீங்க, மண்டை உங்க மண்டை, அம்மா மண்டை இல்லை"

நிறுத்துடி, சும்மா பேசிகிட்டு இருக்காத, மண்டை உடைஞ்சா கடைக்குப் போய் அம்மா பிளாஸ்திரி போட்டுக்குறேன்,"

"அதை மண்டையில் போடுவதற்கு பதிலா உங்க வாயில போட்டா ரொம்ப நல்லா இருக்கும்"

மனைவி சொன்னது வசையா, கிண்டலா என்பதை புரிந்துகொள்ளாத சாரங்கன் அம்மா நாமம் வாழ்க என்று சொல்லிக்கொண்டே குளியல் அறையில் நுழைந்தார். காலை சிற்றுண்டி சாப்பிட உட்காரும் பொழுதும் சாப்பாட்டு மேஜைக்கு எதிரே இருந்த சுவற்றில் பெரிய அளவில் இருந்த அம்மா போட்டோவைப் பார்த்து, "அம்மாவே இதயதெய்வமே உன் நாமம் வாழ்க வாழ்க உன்னால் நாங்கள் சாப்பிடுகிறோம்" என்று சொல்லிவிட்டு சாப்பிட ஆரம்பித்தார்.

எப்படியாவது இந்த மனுஷன் ஆபிசுக்கு போனால் போதும் என்று இருந்தது சரோஜாவுக்கு. அம்மா என்ற வார்த்தையைக் கேட்டு கேட்டு அவளுக்கு அலுத்துப்போய்விட்டது. நல்ல வேளை புருசன் மந்திரியாக இல்லை, மாஜி மந்திரிதான். இப்போதும் மந்திரியாக இருந்திருந்தால் வீட்டிலும் அம்மா துதி கேட்க சகிக்காது என்று நினைத்துக் கொண்டு வீட்டில் இருந்த பத்திரிகைகளை ஒதுக்கி வைத்தாள். எல்லாமே அம்மா புராணம் பாடும் கட்சி பத்திரிகைகள். எனவே கையில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக் கொண்டாள். ஒரு செய்திக் கட்டுரையில் முக்கியமான வார்த்தை புரியாமல் ஆங்கில அகராதியை தேடினாள். அந்த சமயம் வாசலில் அம்மா தாயே பிச்சை போடு என்று குரல் கேட்டது. வாசலுக்குப் போய் கடுப்புடன் கத்தினாள். நீ இங்கே தாயே பிச்சை போடு என்று சொன்னாள் போதும், முதல்ல சொன்ன அந்த வார்த்தை வேண்டாம் என்று சொல்லி அந்த பிச்சைகாரனை அனுப்பினாள். இப்போதெல்லாம் கன்றுகுட்டி அம்மா என்று கத்தினால் கூட கோபம் வருகிறது. ஒருவழியாக சாரங்கன் கட்சி அலுவலகத்திற்கு புறப்பட்டார்.

முன்னிரவு நேரத்தில் சாரங்கன் வீட்டிற்கு வந்தான். அப்போதுதான் அமெரிக்காவில் இருந்து திரும்பிய அவரது மகள் மஞ்சுளா விமான நிலையத்தில் இருந்து வந்திருந்தாள். மகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டார் சாரங்கன். முகத்தைக் கோணிக்கொண்டு சரோஜா சாரங்கனிடம் சொன்னாள்.

"உங்க அம்மா மயக்கத்தில மகளக்கூட மறந்துட்டீங்க. இவள் இன்னைக்கு அமெரிக்காவில் இருந்து வர்றதா சொல்லியிருந்தேனே நீங்கள் மறந்துடுவீங்கன்னு தெரியும். அதனாலதான் என் தம்பியை அனுப்பி இவளை கூட்டிட்டு வரச் சொன்னேன்.

மகளைப் பார்த்ததும் சாரங்கன் பேசத் தொடங்கினான். அம்மா போற்றி போற்றி, அம்மா வாழ்க, அம்மா நீயே எல்லாம், அம்மாவின் அருளால் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கும் மகளே, நீ எப்படி இருக்கிறாய்?"

மகள் கேட்டாள் "அப்பா ஏதாவது பொதுக்கூட்டத்தில் பேசற மாதிரி நெனச்சிக்கிட்டு இருக்கீங்களா? இது வீடுஸ நான் உங்க பொண்ணு, கொஞ்சம் சுற்றும்முற்றும் பாருங்கள் – என்றாள்.

"அம்மாவின் பெயரால் சொல்கிறேன் நீ என் மகள் என்று நன்றாக தெரிகிறது.

அன்றும் மறுநாளும் தன் தந்தை இப்படி அம்மா அம்மா என்று சொல்லிக் கொண்டிருந்ததை கேட்ட மகள் ஏதோ சொல்ல வாயெடுத்து அம்மா என்றாள்.

உடனே சரோஜா அம்மா என்று சொல்லாதே மம்மி என்று சொல் என்றாள்.

அப்பா இப்படியே சொல்லிக்கொண்டிருக்கிறாரே எப்படி பொறுத்துக் கொள்கிறாய் என்று கேட்டாள். பழைய கட்சியில் இருந்த வரை நன்றாகத் தானே இருந்தார். திரும்பவும் அவரை அந்த பழைய கட்சிக்கு அனுப்ப வேண்டியதுதானே. அதுதான் முடியாது அவர்கள் அடிமைகளை கட்சியில் சேர்ப்பதில்லையாம். அந்த அம்மா இருந்தபோது இருந்த சத்தத்தைவிட இப்போது அதிகமா கேட்குது. அப்போ அந்த அம்மாவ ஏமாத்துனாங்க, இப்போ ஜனங்கள ஏமாத்துறாங்க.

இந்த சரித்திரம் உனக்குதான் புரியும், எனக்கு புரியலை ஆனா அப்பாவ எப்படியாவது மாத்தியே ஆகனும். இல்லைன்னா எனக்குப் பைத்தியம் புடிச்சுரும்"

அதுக்கு நீ தான் ஏதாவது செய்யவேண்டும் என்றாள் சரோஜா.

யோசனை செய்து சொல்கிறேன் என்று சொன்ன மகள் மறுநாள் ஒரு அருமையான யோசனையுடன் வந்தாள்.

மம்மி நான் அமெரிக்கா போகும் போது இவரை அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். கொஞ்ச நாள் அங்கே இருந்தாள் எல்லாம் சரியாகிவிடும் என்றாள்.

பைத்தியமா இருந்தா கீழ்ப்பாக்கத்திற்கு அனுப்பிவிடலாம். இது பைத்தியத்தையும் தாண்டின கேஸ். முடிந்தால் அங்கேயே மூளை கழட்டிட்டு வேற மூளையை வச்சு கூட்டிட்டு வா. இவரை எங்காவது அனுப்ப வேண்டும் அதனால் நீ கூட்டிட்டு போ என்றாள்.

மகளும் தந்தையை அமெரிக்காவிற்கு அழைத்துக்கொண்டு போனாள்.

அவள் ஒரு பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணிபுரிவதால் தந்தையை அக்கம் பக்கம் வீட்டில் இருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அங்கே அரைகுறையாக தமிழ் தெரிந்த தமிழர்களிடம் நன்றாக தமிழ் தெரிந்த அமெரிக்கர்களிடமும் பேசத் தொடங்கினார்.

மூன்று மாதங்கள் கழிந்தன.

தந்தையை மறுபடியும் தாய்நாட்டிற்கு அழைத்து வந்தாள். அப்போது பக்கத்து வீட்டுக்கார அமெரிக்கர்களும் இந்தியாவை பார்க்கவேண்டும் என்று சொல்லி உடன் வந்தார்கள். அந்த அமெரிக்க தம்பதிக்கு சாரங்கன் வீட்டில் ஒரு அறை ஒதுக்கப்பட்டது.

தன் மகளிடம் சரோஜா கேட்டாள், உன் தந்தை இத்தனை நாள் அமெரிக்காவில் இருந்தாரே ஏதாவது மாற்றம் தெரியுதா? அம்மா துதி பாடுறதை நிறுத்திட்டாரா என்று கேட்டாள்.

அதற்கு மகள் மஞ்சுளா "எனக்கு டையர்டா இருக்கு அதனால தூங்கப்போறேன். எதுவாயிருந்தாலும் காலையில் பார்த்துக்கலாம்" என்று தன் அறைக்கு சென்றாள்.

காலையில் கையில் காபி டம்ளருடன் சரோஜா அந்த விருந்தினர்களின் அறை கதவை தட்டினாள். அவர்கள் எழுந்து மேடம் வணக்கம் என்று சொல்லிவிட்டு காபி டம்ளரை வாங்கி காபி குடிப்பதற்கு முன்பு அம்மாவின் போட்டோவை பார்த்து அம்மா போற்றி, இதயதெய்வம் போற்றி, அம்மா உன்னால் வாழ்கிறோம், அம்மா நாமம் வாழ்க என்று இருவரும் கோரசாக சொல்லிவிட்டு காபியை குடிக்க ஆரம்பித்தார்கள்.

சினிமா

# கமல் எனும் அசல் சினிமாக்காரன்!



கழுகுமலையான்

1960 ஆம் ஆண்டு தனது ஆறு வயதில் 'களத்தூர் கண்ணம்மா" படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அடியெடுத்துவைத்த கமல் ஹாசன் அறுபது ஆண்டுகளைக் கடந்து வெற்றிகர மாகத் தனது பயணத்தை தொடர்கிறார். பால் வடியும் முகத்தில் பாடல் வரிகளுக்கு வாயசைத்து, சொல்லிக் கொடுத்த வசனத்தை மனப்பாடம் செய்து பேசி பார்வை யாளர்களை ஈர்த்த அந்தச் சிறுவனுக்கு தேசிய அளவில் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருது வழங்கப்பட்டது. 'யார் இந்தப் பொடியன்?", என அப்போது தமிழ் ரசிகர்களை வியப்பில் ஆழ்த்திய அதே கமல்ஹாசன்தான் இப்போது, 'இவருக்கு என்ன செய்தால் சினிமா மோகம் தீரும்? இந்த வயதிலும் இந்த ஓட்டம் ஓடுகிறாரே!' என்று கேட்கும் அளவுக்கு வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறார்.

களத்தூர் கண்ணம்மா திரைப்படத்தைத் தொடர்ந்து சில படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்த கமல் சிறிது இடைவெளிவிட்டு துணைக் கதாபாத்திரங்களில் நடிக்கத் தொடங்கினார். அதற்குக் கிடைத்த கவனம் விரைவாக அவருக்குக் கதாநாயக வாய்ப்புகளைப் பெற்றுத்தந்தது. அதுவரை கதாநாயகர்களுக்கான ஆகிவந்த முகத் தோற்றம் கமலுக்கு வாய்க்கப் பெற்றி ருந்தாலும் அது மட்டுமே அதற்கு காரணமாக அமைய வில்லை. மாறாக அதிக மெனக்கெடலுடன் தான் ஏற்கும் பாத்திரத்தை அணுகும் கமல் விரைவிலேயே நல்ல நடிகன் என்ற பெயரைப் பெற்றார்.

**கலைப் பசி கொண்ட மிருகம்!**

தனக்கு மிகப் பெரும் அங்கீகாரத்தையும் அறிமுகத்தையும் ஏற்படுத்திக்கொடுத்த இயக்குநர் கே. பாலசந்தரின் படங்களில் தொடர்ந்து நடித்துவந்தார். 1977ஆம் ஆண்டு பாரதிராஜா இயக்கிய 16 வயதினிலே படத்தில் நடித்ததன் மூலம் நடிப்புக்காக எந்த எல்லைக்கும் இந்த இளைஞன் செல்வான் என்ற நிலையை உருவாக்கிவிட்டார். அதன்பின் எஸ். பி. முத்துராமன், ஐ. வி. சசி, பாலு மகேந்திரா உள்ளிட்ட தடம் பதித்த இயக்குநர்களின் படங்களில் கமல் நடித்தார்.

1981ஆம் ஆண்டு தனது 27ஆவது வயதில் ராஜபார்வை படத்தின் மூலம் 100ஆவது படத்தை கமல் நிறைவுசெய்தார் அதோடு அந்த படத்திற்கான கதையை எழுதி, தயாரிப்பாளராகவும் அறிமுகமானார். 70களின் மத்தியில் கதாநாயகனாக அறிமுகமான கமல் 1983ஆம் ஆண்டு மூன்றாம் பிறை திரைப்படத்துக்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதுபெறுகிறார் அப்போது அவருக்கு வயது 29.

மிக இளம் வயதில் தேசிய அங்கீகாரம் பெற்றுத் தமிழ்த் திரையுலகை மட்டுமல்ல இந்தியத் திரையுல கையே திரும்பிப் பார்க்க வைத்த கமலை 1987ஆம் ஆண்டு மற்றொரு தேசிய விருது தேடிவந்தது. மணிரத்னம் இயக்கிய நாயகன் திரைப்படம் அதைப் பெற்றுத்தந்தது. இளவயது, முதிர்ந்த வயது என இருவேறு தோற்றங்களில் வேலு நாயக்கர் என்ற கதாபாத்திரத்தில் நடிக்க, அது ரசிகர்கள் மத்தியிலும் பெரிய வரவேற்பைப் பெற்றது. அதைத் தொடர்ந்து தனது நடிப்புப் பசிக்குச் சரியான வேட்டை இல்லை என்பதாகவே வெறிகொண்டு இயங்கிவந்தார்.

எவ்வளவு வித்தியாசமான கதாபாத்திரங்களைக் கொடுத்தாலும் அதை மென்று தின்று ஏப்பம் விட்டுவிட்டு அடுத்து என்ன என்று கேட்ட கமலுக்கு இயக்குநர்கள் தொடர்ந்து சவாலான பாத்திரங்களையோ, படங்களையோ கொடுக்கவில்லை என அவரே குறைபட்டுக்கொண்டிருக்கிறார்.

**முப்பது வயதிலேயே தசாவதாரம் எடுத்த கமல்**

தனது வேலையை மட்டும் பார்த்துக்கொண்டு போகும் வேலை கமலிடம் எப்போதும் கிடையாது. சிறு வயது முதலே படப்பிடிப்பு தளத்துக்குள் புழங்கிவந்த கமல் அனைத்துத் துறை பற்றியும் நல்ல புரிதல் கொண்டவராக இருந்துள்ளார். திரைத்துறை என்று பொதுவாகக் கூறினாலும் அடிப்படையில் இருபதுக்கும் மேற்பட்ட துறைகளைத் தனக்குள் கொண்டது இது. அத்தனை துறைகளையும் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற குறுகுறுப்பு சிலருக்கு இருப்பது வழக்கம்தான். ஆனால் அனைத்திலும் தடம் பதிக்க வேண்டும் என்ற வேட்கையும் அதை அநாயசமாக நிகழ்த்திக்காட்டு வதும் கமல் போன்ற அபூர்வங்க ளுக்கு மட்டுமே கைவரப்பெற்றிருக்கிறது. தமிழில் மட்டு மல்ல, இந்திய அளவிலும் அப்படியொரு அபூர்வ மான கலைஞன் கமல்.

சினிமாவின் மற்ற துறைகளில் அவருக்கு இருந்த புரிதல்தான் அவருக்கான கதைகளை, கதாபாத்திரங் களை அவரையே அமைத்துக்கொள்ளத் தூண்டியது. தனக்கு வேண்டிய நபர்களைக் கொண்டு அதை இயக்கச் சொல்லி நடித்தார். குணா, மகாநதி, அவ்வை சண்முகி, ஆளவந்தான், அன்பே சிவம், தசாவதாரம் என பல படங்களை இவரது மேற்பார்வையிலேயே அந்தந்த இயக்குநர்கள் இயக்கினர்.

இவையெல்லாம் தமிழ் சினிமாவில் குறிப்பிடத் தகுந்த படைப்புகள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. கமலின் நடிப்புக்கு சவாலாக விளங்கக்கூடிய பாத்திரங் கள் அந்தப் படங்களில் இடம்பெற்றிருந்தன. ஆனால் கமல் எனும் கலைஞனின் அபார நடிப்பை இங்கு பார்க்கலாம் என அவரது நடிப்பைக் காட்டுவதற்காக உருவாக்கப்பட்டவை போன்ற தோற்றத்தையும் அந்தப் படங்கள் கொண்டுள்ளன.

**சிறகுகளைச் சுருக்கிக்கொண்ட பறவை!**

ஒரு கலைஞன் தொடர்ந்து இயங்கும் பட்சத்தில், தனது இருபதுகள், முப்பதுகளில் தொட்ட உயரத்தை அதற்கடுத்த சில பத்தாண்டுகளில் மிக சாதாரணமாக தாண்டிச் செல்வான் எழுத்து, ஓவியம், நடிப்பு என எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். தொழில்முறை யிலும் கருத்தியல் ரீதியாகவும் பட்டை தீட்டப்பட்டுக் கொண்டே இருப்பான். அதே சமயம் ஒரு விளையாட்டு வீரனை இந்த அனுகுமுறையுடன் பார்க்க முடியாது. உதாரணமாக ஒரு கிரிக்கெட் வீரர் தனது இருபதுகளில் நிகழ்த்திக்காட்டும் சாதனைகளை அவரால் முப்பது களில் தொட முடியாது. உடற்தகுதி, காயங்கள், குறைந்து போகும் ஆக்ரோஷம் என அதற்கான காரணங்கள் நியாயமானவை. ஆனால் சச்சின் போன்ற விதிவிலக்குகள் உண்டு. முப்பதுகளுக்குப் பின், பல விதமான உடல் உபாதைகளுக்கும் அறுவை சிகிச்சைகளுக்கும் ஆளான பின்னும் சதங்களை விளாசிச் சென்றவர் அவர்.

கலைஞனைப் பொறுத்தவரை ஆண்டுகள் ஏற மேலும் பக்குவப்படுவான். தனது துறையில் நிபுணத்துவம் பெறுவான். கருத்தியல் ரீதியாகவும் பண்பட்ட இடத்துக்கு நகர்வான். இந்த இடத்தில் கமலின் முப்பதுக்கு பிந்தைய பயணத்தை கருத்தில் கொள்ளலாம்.

தனக்குத் தேவையான பாத்திரங்களை வழங்க, கதைகளை உருவாக்க, புதிய பரிமாணத்தில் இயக்க தமிழ் சினிமாவில் இயக்குநர்கள் போதுமான அளவில் இல்லை என்பதாலே தனக்கு தேவையான படங்களை இயக்கி தயாரித்ததாக கமல் கூறியிருக்கிறார். அதில் உண்மை இருந்தாலும் இந்த உண்மைக்கு மறுபக்கம் ஒன்றும் உள்ளது. கமல் என்ற நடிகன் இந்தியா முழுவதும் கவனம் பெற்றுவந்தபோதுதான் இந்திய சினிமாவின் உயரிய இயக்குநர்களான சத்யஜித் ரே, அடூர் கோபால கிருஷ்ணன், அரவிந்தன், மிருணாள் சென் போன்றோர் தொடர்ந்து படங்களை இயக்கிவந்தனர். அவர்களது திரைப்படங்களில் கமல் நடித்திருந்தால் இன்று கமலின் வீச்சு பல மடங்கு அதிகமாக இருந்திருக்கும்.

மேற்குறிப்பிட்ட இயக்குநர்கள் தங்களது பிராந்தியங்களுக்கு உள்ளிருந்தே படங்களை இயக்கிவந்தனர். தங்கள் மொழி, கலாச்சாரத்தோடு தொடர்பில்லாத ஒரு தமிழ் நடிகரை பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனாலும் கமல் தனது நடிப்பின் மூலம் அவர்களிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்திருக்க வேண்டும் அல்லவா. அப்படியான இயக்குநர்களிடம் கமல் வெறும் பத்துப் படங்கள் நடித்திருந்தாலும் அவரது நடிப்பு பாணியில் கட்டாயம் பெரிய மாற்றம் நிகழ்ந்திருக்கும். இந்தி, மலையாளம் என மற்ற மொழிகளில் கமல் பல படங்கள் நடித்திருந்தாலும் அவர் தமிழ் நடிகராகவே தனது பரப்பைச் சுருக்கிக்கொண்டார். இந்தியா கடந்தும் அறியப்பட்டிருக்க வேண்டிய, மற்ற நாட்டினரை திரும்பிப் பார்க்கவைத்திருக்க வேண்டிய நடிகருக்கு அது அமையாமல் போனது துரதிர்ஷ்டமே.

அதிசயங்கள் நிகழ்த்திய இயக்குநர் கமல்

கமல் நடிக்கும் திரைப்படங்களில் கமல் மட்டுமே ஒட்டுமொத்தமாக நிறைந்திருப்பார் என்று சொல்லப்படுவதுண்டு. இயக்குநர்களைப் பின்னிருந்து இயக்குவதாலும், தானே இயக்குநராகச் செயல்பட்டதாலும் அந்தக் குறை மேலும் பெரிதானது. ஆனால் அதைச் சற்று ஓரமாக வைத்துவிட்டு பார்த்தால் இயக்குநராக கமல் சாதித்ததும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் சினிமாவில் புத்தாயிரத்துக்குப் பின் வந்த இயக்குநர்கள் மண் சார்ந்த கதைகளை உண்மைக்கு நெருக்கமாகவும், சிறந்த தொழில்நுட்பத்துடனும் படைக்கத் தொடங்கினர். அமீர், சசி, வசந்தபாலன், சசிகுமார் போன்ற இயக்குநர்கள் அதில் முக்கியமானவர்கள்.

(05ஆம் பக்கம் பார்க்க)

விளையாட்டு

சி.விமலன்

# மெய்வல்லுநர் விருதுகள்





சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் வருடந்தோறும் சிறந்த வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வருடத்துக்கான விருதுகள் கடந்த சனிக்கிழமை மொனாக்கோவில் வழங்கப்பட்டது. இதில் சிறந்த மெய்வல்லுநர் வீரராக கென்யாவின் மரதன் ஓட்ட வீரரான எலியுட் கிப்சொக் தெரிவு செய்யப்பட்டார். கடந்த ஒக்ரோபர் மாதம் வியன்னாவில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் முதன்முறையாக இரண்டு மணித்தியாலங்களுக்குள் ஓடி முடித்திருந்தாலும் அது உத்தியோகபூர்வமற்ற போட்டியாக விளங்கியதனால் அவரது சாதனை அங்கீகரிக்கப்படவில்லை.

ஆனாலும் மரதன் ஓட்டப்போட்டியில் அவரே உலக சாதனைக்குரித்துடையவராக விளங்குகின்றார். கடந்த ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெற்ற மரதன் போட்டியில் 2 மணி 1 நிமிடம் 39 செக்கன்களில் ஓடி அதனை நிகழ்த்தியிருந்தார்.இதுவே அவரை இவ்விருதுக்கு உரியவராக்கியுள்ளது. கடந்த வருடமும் இவ்விருதை அவரே பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

அதுபோல சிறந்த மெய்வல்லுநர் வீராங்கனை விருதுக்கு அமெரிக்காவின் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்ட வீராங்கனையான டாலிலா முகமட் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் டோகாவில் நடைபெற்ற உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் தனது சாதனையை தானே முறியடித்து (52.16 செக்கன்கள்) தங்கப்பதக்கம் வென்றதே இம்முறை விருதுக்குக் காரணமாக விளங்கியது.

இந்தவிருது வழங்கும் முறையில் 50 சதவீதமான வாக்குகளை சர்வதேச தடகள வீரர்களும் 25 சதவீத வாக்குகளை பயிற்சியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் 25 சதவீதமான வாக்குகளை ரசிகர்களும் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மாற்றம்

ரென்னிஸ் போட்டிகளின் உலகக் கிண்ணம் என அழைக்கப்படுவது டேவிஸ் கிண்ணப் போட்டிகள். இந்தப் போட்டிகள் கடந்து 118 வருடங்களாக 8 அணிகள் பங்கு பற்றும் விதமாகவே விளையாடப்பட்டு வந்தன. இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென நீண்டகாலமாகவே வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் கடந்தவாரம் நடைபெற்று முடிந்த இந்த வருடத்துக்கான போட்டியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அந்தவகையில் இம்முறை 18 அணிகள் பங்கு பற்றியதோடு போட்டிகள் அனைத்தும் மட்ரிட் நகரிலேயே நடைபெற்றும் இருந்தன. வழமையாக 5 செற்கள் கொண்டதாக விளையாடப்படும் போட்டிகள் இம்முறை 3 செற்கள் கொண்டதாக குறைக்கப்பட்டன. இதில் இரண்டு ஒற்றையர் போட்டிகளும் ஒரு இரட்டையர் போட்டியும் உள்ளடங்கும். ஒரு வார காலத்தினுள் தொடர்ச்சியாகப் போட்டிகளில் பங்குபற்றியமை வீரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தினாலும் இம்மாற்றங்கள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.


ஆண்கள் மாத்திரமே விளையாடும் இந்தத் தொடரில் பெண்களும் எதிர்காலத்தில் கலந்து கொள்ளும் வகையில் மாற்றம் செய்யப் படவேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதிப்போட்டியில் கனடாவை வீழ்த்தி ஸ்பெயின் 6 ஆவது தடவையாக சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை

கடந்தவாரம் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் – அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான பிரிஸ்பன் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி சார்பில் அதிகூடிய 185 ஓட்டங்களைப் பெற்றவர் மார்னஸ் லபஸ்சக்னே.இது அவரது முதல் சதமாகும். அது போல இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் நியூ சிலாந்து சார்பில் அதிகூடிய ஓட்டமான இரட்டைச்சதம் அடித்தவர் விக்கெட் காப்பாளரான வோட்லிங்.

இதன்மூலம் நியூசிலாந்து சார்பில் இரட்டைச் சதம் அடித்த முதல் விக்கெட்காப்பாளர் என்ற சாதனையையும் அவர் படைத்திருந்தார். ஒரே நாளில் இவ்விரு சாதனைகளையும் படைத்த இவர்களது வாழ்க்கை யிலும் சில ஒற்றுமைகள் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது. லபஸ்சக்னே தென்னாபிரிக்காவின் வடமேற்கு மாகாணமான கிளெக்ஸ்டோப்பில் பிறந்து 10 வயதாக இருக்கும் பொழுது இவரது குடும்பம் அவுஸ்ரேலியாவுக்கு குடிபெயர்ந்து சென்றது.

அதுபோல வோட்லிங் தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் பிறந்தவர். அவரும் 10 வயதாக இருக்கும் போது இவரது குடும்பம் நியூசிலாந்துக்கு குடிபெயர்ந்து சென்றது. அந்தவகையில் தத்தம் நாடுகளில் நடைபெற்ற உள்ளூர் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி தேசிய அணியில் இடம்பெற்ற இவ்விருவரும் ஒரேநாளில் சதமும் இரட்டைச் சதமும் அடித்து ரசிகர்களை ஆச்சரியப் படுத்தியுள்ளனர். ஏற்கனவே கடந்தகாலங்களில் தென்னாபிரிக்காவில் பிறந்த கெவின் பீற்றர்சன், அண்ட்ரூ ஸ்ரோஸ் போன்றவர்கள் இங்கிலாந்து அணியில் இடம்பிடித்து சாதனைகள் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மீண்டும் பதவியில்




ஸ்பெயின் உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் வீரரான லூயிஸ் என்றிக் 2018 ஜூலை மாதம் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் பார்சிலோனா அணிக்கும் 3 வருடங்கள் தலைமைப் பயிற்சியாளராக விளங்கியவர்.

ஸ்பெயின் அணிக்குப் பதவியேற்று சுமார் ஒரு வருடத்தின் பின்னர் அவரது மகள் புற்றுநோய்த் தாக்கத்திற்கு ஆளாகி இருப்பது தெரியவந்ததை அடுத்து தற்காலிகமாகப் பதவியில் இருந்து கடந்த ஜூன் மாதம் விலகினார். ஆனாலும் சிகிச்சை பலனின்றி 3 மாதங்களுக்கு முன்னர் அவரது மகள் இறந்தார்.

இந்நிலையில் அதிலிருந்து மீண்டு கடந்தவாரம் மீண்டும் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுள்ளார். அவர் பதவி விலகியிருந்த காலத்தில் இடைக்காலப் பயிற்சியாளராக உதவிப் பயிற்சியாளரான றொபேர்ட் மொறீனோ நியமிக்கப்பட்டிருந்தார். மொறீனோவின் பயிற்சியின் கீழ் ஸ்பெயின் 2020 யூரோ கிண்ணத் தகுதி காண் போட்டிகளில் 10 போட்டிகளில் விளையாடி ஒரு தோல்வியைக் கூடச் சந்திக்காமல் 8 வெற்றிகள் 2 சமநிலையோடு யூரோ கிண்ணப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதிலடி



இந்திய – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான கொல்கத்தா டெஸ்ட் போட்டியின் பரிசளிப்பின் போது "விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெறுவதென்பது மனநீதியானது. இதனை கங்குலி தலைமை ஏற்ற பின்னர் தான் கற்றோம். அதன் படி விளையாடுகின்றோம். அனைத்தும் கங்குலி அணியில் இருந்தே தொடங்கியது" என்றதொரு கருத்தைக் கூறியிருந்தார்.

ஆனாலும் இந்தக் கருத்து முன்னாள் இந்திய வீரரான சுனில் கவாஸ்கருக்கு உவப்பானதாகப் படவில்லை. அவர் அதனை மறுத்துக் கருத்துக் கூறியுள்ளார். இது அருமையான வெற்றிதான். ஆனாலும் ஒரு கருத்தைக் கூற விரும்புகின்றேன். கங்குலி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருப்பதால் அவரைப் பற்றி நன்றாகச் சொல்வதற்கு கோலிக்கு ஒரு தேவை இருக்கிறது. பெரும்பாலான மக்கள் 2000 ஆம் ஆண்டு தான் கிரிக்கெட் தொடங்கியதாக நினைக்கிறார்கள். ஆனால் முன்பே இந்திய அணி 70களிலும் 80 களிலும் வெற்றி பெற்றதோடு வெளிநாடுகளிலும் தொடர்களைச் சமப்படுத்தி இருக்கின்றது. குறிப்பாக 1986இல் இங்கிலாந்தில் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால் அப்போது விராட் கோலி பிறக்கவில்லை என கோலிக்கு பதிலடி கொடுத்துள்ளார்.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.11.2019 அன்று வெளியிடப்பட்டது.